இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 27 செப்டம்பர் 2024 இதழ்:- 17

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் முதல் 14 வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி.

தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600



## இலங்கையின் 9வது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுர பதவியேற்பு! சவால்களை எதிர்கொண்டு நாட்டை முன்னேற்றுவேன் என உரை!



ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்த தீர்க்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்க உறுதியளித்துள்ளார். இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 23 செப் 2024 திங்கட்கிழமை பதவிப் (4ம் பக்கம் பார்க்க)

## யார் இந்த அநுரகுமார திஸாநாயக்கா?

# தமிழரசுக்கட்சி ஆதரித்த சஜித்திற்கு வடகிழக்கின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் முதலிடம்! 676,681 வாக்குகளைப் பெற்றார்!

இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆதரவளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வட, கிழக்கின் 5 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக 676,681 எனும் அதி கூடிய வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கின்றார். நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது எனும் விடயத்தில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் மாறுபட்ட (6ம் பக்கம் பார்க்க)



# தமிழ் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் 226,343 வாக்குகளைப் பெற்றார்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



21 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd

**Oshawa** $264,990
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


### Sheppard Ave E / Neilson Rd

**Malvern** $749,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED


### Neilson/Tapscott

**Scarborough** $459,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Simcoe St N/ Brittania Ave


**Oshawa** $770,000
4 Beds • 3 Bath • 9 Rooms
A Beautiful Corner Townhouse

### Sheppard & Neilson

**Malvern** $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

### Galloway Rd/ Guildwood Pkwy

**Scarborough** $998,888
3+4 Beds • 4 Baths • 6+5 Rooms
Hardwood Throughout


### McLevin Ave & Morningside


**Malvern** $888,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

### Townline Rd & Shankel Rd

**Oshawa** $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

### Mississauga Rd & Eglinton Ave


**Mississauga** $999,999
3 Beds • 4 Baths • 6+1 Rooms
Fully Fin Basement W Sep Entrance


### Church St N & Rossland Rd W

**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

### Woodbine Ave & Church St

**Georgina** $1,170,000
4 Beds • 4 Baths • 9 Rooms
Stunning 2-year-old home


### Holland St W & Simcoe Road

**Bradford** $1,290,000
4+1 Beds • 5 Baths • 9 Rooms
Finished W/O Basement Kitchen

### Markham Rd / 16th Ave

**Markham** $3,599
3 Beds • 2 Baths • 8 Rooms
~5min Walk To Mount Joy GO

### Bellamy Rd/Eglinton Ave


**Markham** $3,000
3 Beds • 1 Bath • 5 Rooms
Quick Access To Highway 401

### Warden Ave / St. Clair Ave E


**Scarborough** $2,700
2+1 Beds • 1 Bath • 5 Rooms
Nicely Maintained And Cleaned

### Neilson Rd & Sheppard Ave


**Scarborough** $2,000
2 Beds • 1 Bath • 4 Rooms
Oversized Basement For Rent

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# சிங்கள டயஸ்போரா VS தமிழ் டயஸ்போரா

சிங்கள டயஸ்போராக்கள் எவ்வளவு துல்லியமாக புத்திசாதுரியமாக செயல் பட்டு தமக்கான ஊழலற்ற சிறந்த தலைமையொன்றை கட்டி அமைக்க வேண்டும் என்று சில வருடங்களாக செயல்பட்டு அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். உண்மையில் அனுரவின் வெற்றிக்கு மிக காத்திர மான காய் நகர்த்தல்களை புரிந்தவர் கள் சிங்கள புலம்பெயர் மக்கள் என் றால் மிகையாகாது!




லண்டன் கனடா அமெரிக்கா, ஜப்பான் ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள் என சிங்கள டயஸ்போராக் கள் மிகச் சிறப்பாக செயற்பட்டு குறு கிய காலத்துக்குள் சிங்கள மக்களின் மனதில் அனுரவை இடம் பிடிக்க வைத்து இந்த அபார வெற்றியை எற்படுத்தியிருக்கிறார்கள்.

சிங்கள டயஸ்போராங்கள் தங்கள் தாய் மண்ணுக்கான நல்ல சிறந்த அரசியல் தலைவனை உருவாக்க வேண்டும் தம் தாய் நாடு வீறு கொண்டு முன் னேற வேண்டும் என்று இனவாதத் திற்கு அப்பால் போய் மிக நுண்ண ரசியல் செய்து இன்று தமக்கான சிறந்த தலைவனை அரசியலை நிலை நிறுத்தி வெற்றி கண்டிருக் கிறார்கள்.

அவர்களின் ஒரே இலக்கு தம் நாட் டின் மீதான தேசத்தின் மீதான மக்கள் மீதான தீரா காதல். அத்தனை படித்த வர்கள், அரசியல் விற்பன்னர்கள், பொருளாதார நிபுணர்கள் , சாமானிய மக்கள் என புலம்பெயர் சிங்கள டயஸ்போராக்கள் ஒரே புள்ளியில் குவிந்து நின்று செயல்பட்டார்கள், அதன் விளைவுவாக வெற்றியை பெற்றார்கள்.

கம்னியூச கொள்கைகளில் பின் புதை ந்துள்ள JVP யிலிருந்து ஒரு தலை வன் மேலெழுந்து விட கூடாது என பிராந்திய வல்லரசு தொடக்கம் அமெ ரிக்கா ஐரோப்பா என்பன இவ்வளவு காலமும் விழிப்பாக இலங்கையில் செயல்பட்டு கொண்டிருந்தன. அரகலய போராட்டத்தில் அனுராவின் எழுச்சியின் அபரிவித தன்மையை உணர்ந்த அமெரிக்க தூதுவர் அப் போது அனுரவை அடிக்கடி சந்தித் துப் பேசியுமிருக்கிறார்.

ஏன் அனுரவுக்கான மக்கள் எழுச்சி யினை முன்னரே தீர்மானித்திருந்த இந்தியா என்றுமில்லாதவாறு ஜெய் சங்கரை அனுப்பி பல மாதகங்களுக்கு முன் சந்திப்புக்களை செய்திருந்தது ஆனாலும் அனுரவின் அசுர வளர்ச்சி இந்தியா அமெரிக்காவுக்கு கண்ணுள் தூசி விழுந்தால் போல் உருத்தல் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது!

ஏனெனில் இப்போதுள்ள போட்டி நிலை பூகோள வல்லாதிக்க அரசியல் களத்தில் இலங்கை மீளவும் கம்யூனி சிய கொள்கை கொண்ட சீன வல்லா திக்கம் பக்கம் சாய்ந்தால் அதுவும் கம்யூனீசிய கொள்கையுடனான ஆயுத போராட்ட வழி வந்த அரசு ஒன்று சீன கம்யூனீச பேரரசு பக்கம் சற்று சாய்ந்தால் கூட மற்றைய வல்லாதி க்கங்களுக்கு பெரும் குடைசலாகவே இருக்கும்! அதற்கும் அவர்கள் மீண்டும் பெரும் விலையொன்றை



கொடுக்க வேண்டி வரும். அனுரவின் வெற்றியை தடுக்க பல முனை முனைப்புக்களையும் முயற்சிகளை யும் அந்த வல்லாதிக்க சக்திகள் மேற் கொள்ளவும் தவறவில்லை.

உதாரணமாக நாட்டிலும் புலத்திலும் சிங்கள மக்கள் மத்தியில் அனுர அலை அடிக்க தொடங்கியவுடன் அரசியல் ஆய்வு புள்ளிவிபரங்களின் படி வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பெருவாரி வாக்குகள் அனுர பக்கம் சாயமல் பார்த்துக் கொள்ளவும் அந்த வல்லாதிக்கங்கள் நிகழ்ச்சி நிரல்களை வரையவும் தவறவில்லை. அதற்காக பல தந்திரோபாய சுய வேட்பாளர் நிறுத்தல்கள் மற்றும் இதர நிகழ்வு களும் நிகழ்ந்தேறின!! இதெல்லாம் அனுர தரப்புக்குக்கும் தெரியாம லில்லை அதன் தாக்கம் தான் அவர் யாழ்பாணத்தில் நிகழ்த்திய கூட்டத் தில் சிங்கள மக்கள் பெருவாரியாக தனக்கு ஆதரவை தரும் இச் சந்தர் ப்பத்தில் தமிழர்களும் ஆதரவை நல்காது போனால் சரியாக இராது' என சாரப்பட கருத்து தெரிவித்தி ருந்தார்.

ஆனால் அக்கருத்தின் நீள அகல, ஆழம் அறியாதோர் அதை அவரின் இனவாத கருத்தாடலாக சித்தரித்த னர். இவ்வளவு நிகழ்வுகள் மறைமுக நிகழ்சி நிரல்களுக்கு மத்தியிலும் சிங்கள டயஸ்போராக்கள் அத்தனை வல்லாதிக்க இராஜதந்திரத்துக்கு மேலாக பல படி மேல் போய் ஒற்று மையாக காய் நகர்த்தி இராஜதந்திர வெற்றியடைந்திருக்கிறார்கள். தமக் கான தூய தலைவனை தூக்கி நிறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் நம் புலம்பெயர் தமிழ் டயஸ் போராக்கள் என்ன செய்து கொண்டி ருக்கிறார்கள் அவர்களின் அரசியல் நிலைபாடு என்ன? அவர்கள் இது வரை தமிழ் மக்களுக்காக சாதித்த தும் என்ன? குறுகிய காலத்துக்குள் சிங்கள டயஸ்போராக்கள் கண்ட வெற்றியை பல தசாப்தகாலமாக புலம் பெயர் நாடுகளில் இலங்கை எம்பசி களின் எண்ணிக்கைக்கு அதிகமாக செயல்படும் தமிழ் டயஸ்போராக்களி னால் இவ்வளவு காலமும் தமிழினத் துக்காக நிகழ்த்தப்பட்ட சாதனை என்ன? புலம்பெயர் தேசங்களில் போட்டிக்கு போட்டியாக பல அமை ப்புக்களை தொடங்குவதும் தங்களுக் குள் புடுங்குப்பட்டு கொள்வதும் ஈழத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் இன் னும் பல படி போய் ஒரு கட்சியின் பல உறுப்பினர்களை பிரித்தாள நிதி அனுப்பி செயல்பட்டு கொண்டிரு கிறார்கள்.

இந்த தமிழ் டயஸ்போராக்களினால் ஈழத்தில் ஏறபடுத்தப்பட அரசியல் முயற்சி என்ன? பொருளாதார முயற்சி என்ன? என்பதை யாரும் பட்டியல்படுத்த முடியுமா? அதிலும் பல (22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# இலங்கையின் 9வது நிறைவேற்று ஜனாதிபதியாக அநுர பதவியேற்பு! சவால்களை எதிர்கொண்டு நாட்டை முன்னேற்றுவேன் என உரை!



நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்த தீர்க்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 23 செப் 2024 திங்கட்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்ட அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்காக ஆற்றிய விசேட உரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஜனநாயக ரீதியாக மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளார்கள். எமது நாட்டின் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்த எனது ஆட்சிக்காலத்தில் தீர்க்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்பையும் அவரது அரசியல் வகிபாகத்தையும் மதிக்கிறேன். தேர்தலை நடத்துவதும் அரச தலைவரை தெரிவு செய்வது மாத்திரம் ஜனநாயகமல்ல. எனது ஆட்சியில் ஜனநாயகத்தை முறையாக பாதுகாப்பேன். அவசியமான தீர்மானங்களை மேற்கொள்ள ஒருபோதும் தயங்க மாட்டேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், சவால்மிக்க பொருளாதார சூழலை கொண்ட நாட்டையே பொறுப்பேற்றுள்ளேன். என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பை சரிவர நிறைவேற்றுவேன். அதனை செய்து இந்த சமூகத்துக்கு நிரூபித்துக்காட்டுவேன். நாடு என்ற ரீதியில் எம்மால் தனித்து செயற்பட முடியாது. நாம் அனைத்து நாடுகளுடன் ஒன்றிணைந்து பொது கொள்கையுடன் பயணிப்போம் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

நாம் மிகவும் சவாலானதொரு கட்டத்தில் தான் உள்ளோம். நான் மெஜிக் காரனோ மாயாஜால வித்தைக் காரனோ கிடையாது. நானும் இந்த நாட்டில் பிறந்த ஒரு சாதாரண பிரஜை. எனக்கும் ஆற்றல்கள் இருக்கின்றன. ஆற்றாமைகளும் இருக்கின்றன. நாம் அறிந்த விடயங்களும் இருக்கின்றன. அறியாத விடயங்களும் இருக்கின்றன. ஆனால் என்னுடைய முதன்மைப்பணி ஆற்றல்களை உறிஞ்சி எடுத்து அறிந்தவற்றை ஒன்று திரட்டி மிகச் சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு இந்த நாட்டை நெறிப்படுத்துவதாகும்.

அதனால் அந்த கூட்டான இடையீட்டின் பங்காளியாவதே என்னுடைய பொறுப்பாகும். நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் என்னிடம் ஒரு தலையாய பொறுப்பு இருப்பதாக நான் நம்புகிறேன்.

இந்த சவாலை வென்றெடுப்பதற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாற்றுவதற்காக என்னிடம் கையளிக்கப் பட்டுள்ள பொறுப்பினை நான் முறைப்படி ஈடேற்றுவேன். எமது நாட்டுக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகும்.

உலக நாடுகள் மத்தியில் எத்தகைய அதிகாரப் பிளவுகள் இருந்தாலும் நாங்கள் உலகில் தனிமைப்படுத்தப் பட்ட ஒரு நாடாக அமர்ந்து விட முடியாது. உலகத்துடன் கூட்டாக ஒருங்கிணைந்து பயணிக்க வேண்டும். அதற்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்வதில் நாங்கள் ஒருபோதுமே தயங்க மாட்டோம். அதைப் போலவே எமது நாட்டை கட்டியெழுப்புகையில் கைத்தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர் முக்கியமானவர்களாக கருதப்படுவார்கள். எனவே அவர்களை பலம் பொருந்தியவர்களாக கட்டியெழுப்ப அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுவார்களென நாங்கள் நம்புகிறோம்.

எமது நாட்டின் ஜனநாயகத்தினால் நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டிருக்கிறேன். அவ்வாறு தெரிவு செய்து கொள்வதற்காக மக்கள் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனக்கு அளிக்கப்படாத வாக்குகளும் இருக்கின்றன. எனவே எமது வெற்றியின் உள்ளடக்கம் மற்றும் அளவு பற்றி எமக்கு சிறந்த புரிந்துணர்வு இருக்கின்றது.

எமக்கு ஒத்துழைப்பு நல்காத, எம்மை நம்பாத பிரஜைகளின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதும் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதும் எனது ஆட்சிக் காலத்தில் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பாக அமைகின்றது. அந்த பணியை சரிவர ஈடேற்ற முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## இறுதி ஜனாதிபதி அநுராவா?

இதேவேளை இலங்கை தனது இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளது என ஜேவிபியின் மத்தியகுழு உறுப்பினர் சுனில்ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதியின் பதவிக்காலத்திற்கு பின்னர் நீங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை பார்க்க மாட்டீர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கும் அரசியல் உறுதிப்பாடுடைய ஒருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார், இந்த நோக்கத்திற்கு மக்கள் தங்களின் ஆதரவை தரவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என தெரிவித்துள்ள சுனில் ஹந்துநெத்தி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதை உறுதி செய்துள்ளார்.




கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் இருப்பிடம் மற்றும் கும்பாபிசேகம் சம்பந்தமான முக்கியமான கலந்துரையாடல் 13 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்துவப் பணம் செலுத்திய அம்பாள் ஆலய அங்கத்தவர்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இதுவரை அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை 18 செப் 2024

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# உதிரிகளின் திட்டத்தை வெளிப்படுத்திய செல்வம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்து அதிலிருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியை உடைத்து தமிழரசுக்கட்சியை பலவீனப் படுத்தும் ஒரேயொரு நோக்கில் தான் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் கோரிக்கை எழுப்பப்பட்டதும் தங்களுக்குள் ஒரு பலி ஆட்டைக் கண்டு பிடிக்க முடியாமல் அப்பாவி தமிழ்த் தேசியவாதியான அரியநேந்திரனைக் களமிறக்கிய கூட்டில் உள்ள ரொலோ செல்வம் அடைக்கலநாதன் தன் அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ள செய்தியில்

அரியநேந்திரனின் பெற்ற வாக்குகள் தமிழர்களின் ஒற்றுமையை பறைசாற்றும் வெற்றி என்பதோடு பாராளுமன்ற தேர்தலிலும் பொது கட்டமைப்பினூடாக களமிறங்குவோம் என தெரிவித்தார்.



தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் திரட்சியையும் ஓர் அணியில் தமிழ் மக்கள் திரள வேண்டும் என்கின்ற ஒரு நற்செய்தியையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு பலப் பரீட்சை எமது தேசத்தில் இடம்பெற்றது.

இதற்கு தமிழ் மக்கள் தங்களது ஆதரவை தெரிவித்திருக்கின்றார்கள். அவருக்கு கிடைத்த இரண்டே கால் இலட்சம் வாக்குகள் என்பது ஒரு வெற்றியின் முதற் படியாகவே கருதுகிறோம்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இந்த பொதுக் கட்டமைப்பின் ஊடாகவே நாம் தேர்தலை சந்திப்போம். இது மக்களின் ஒரு திரட்சியான வெளிப்பாடாக இருக்கும் என்பதோடு ஒற்றுமையை விரும்பாத கட்சிகளை மக்கள் புறக்கணிப்பார்கள் என்பதையும் பாராளுமன்றத் தேர்தல் வெளிப்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

# அனுரவுக்கு இந்தியப் பிரதமர் வாழ்த்து! பூச்செண்டுடன் முதலில் ஓடிய தூதுவர்!

இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்காவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இந்தியாவின் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை கொள்கையின் கீழ் இலங்கை சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. எமது மக்கள் மற்றும் முழு பிராந்தியத்தின் நலனுக்காக எமது பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் விரும்புகிறேன் என்று தனது ஓ பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இவருடைய வாழ்த்துக்கு அனுரகுமார திஸாநாயக்கவும் நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 9ஆவது நிறை



வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுர குமார திசாநாயக்கவை முதலில் ஓடிச் சென்று சந்தித்த இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்தியத் தலைமைத்துவத்தின் நல் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், மக்களின் ஆணையினை வென்றமைக்காக பாராட்டுகளையும் தெரிவித்திருந்தார்.

பல நாகரிக ஒற்றுமைகளை கொண்டுள்ள இரட்டையராகவும் நமது இரு நாடுகளினதும் மக்களது செழுமைக்காக உறவுகளை மேலும் வலுவாக்க உறுதி பூண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் புதிய ஜனாதிபதி பதவியேற்ற மறுநாளே நாடாளுமன்றம் கலைப்பு!



இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற மறுநாளே இதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. தன்னுடைய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரியவை 24 செப் 2024 தான் அவர் பிரதமராக அறிவித்திருந்தார். பிற்பகல் இலங்கையின் புதிய பிரதமராக அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு, நாடாளுமன்றத்தில் மூன்று இடங்கள் மாத்திரமே காணப்பட்டதால் புதிய சட்டங்களை இயற்றுவதில் சிக்கல் இருந்தது. இத்தகைய சூழலில் புதிய ஜனாதிபதி அடுத்து என்ன செய்ய போகின்றார் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்த சூழலில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அத்துடன், நாடாளுமன்ற தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வேட்புமனு தாக்கல் அக்டோபர் 4-ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 11-ஆம் தேதி வரை நடைபெறும். வாக்குப்பதிவு நவம்பர் 14-ஆம் தேதி நடத்தப்படும். தேர்தலுக்குப் பிறகு புதிய நாடாளுமன்றம் நவம்பர் 21-ஆம் தேதி கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 225. இவர்களில் 196 மக்கள் பிரதிநிதிகள் மக்கள் ஆணை ஊடாகவும், 29 பிரதிநிதிகள் தேசிய பட்டியல் ஊடாகவும் தெரிவு செய்யப்படுவது வழக்கம். ஆட்சியிலுள்ள கட்சியொன்று ஆகக் குறைந்தது 113 உறுப்பினர்களைத் தன் வசப்படுத்த வேண்டும். அப்படியென்றால் தான், ஆட்சியை சுமூகமாக நடத்திச் செல்ல முடியும் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் இதுவரை இல்லாதளவு சவால் மிகுந்த ஆட்சியாகவே இந்த ஆட்சி காணப்படுகின்றது என மூத்த நாடாளுமன்ற செய்தியாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குப் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றி கொள்ள முடியுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், ``வெல்ல வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு உண்டு. தற்போதுள்ள நாடாளுமன்றத்தில் கூட்டணி சேராதுள்ள ஒரே கட்சி இந்தக் கட்சி மாத்திரம் தான். இனிவரும் காலத்திலும் தாம் யாருடன் இணைந்து கூட்டணியாக போட்டியிட போவதில்லை என இவர்கள் அறிவித்துள்ளார்கள் என்கிறார்.

என்னவாக இருந்தாலும் 113 ஆசனங்களை இவர்கள் நாடாளுமன்றத்தில் கைப்பற்ற வேண்டும். ஜனாதிபதியொருவர் வெற்றி பெற்றதன் பின்னர் அவரைச் சூழ்ந்த அரசாங்கங்கள் அமைவது தான் வழக்கமாக இருந்தது. 57 லட்சம் வாக்குகளை அநுர குமார திஸாநாயக்க பெற்றதைப் போன்று, நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மையைப் பெற வாய்ப்புகளை ஏற்படுத்த முயற்சிப்பார்கள். ஆனால் அந்தளவு வாக்குகளை எடுப்பது நிச்சயமாக சவாலாகவே இருக்கும் என்றார்.

# இலங்கையில் அரசியல் பூகம்பம்

இடதுசாரி அனுரகுமார திசநாயக்க வார இறுதியில் இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாரம்பரிய உயர் குழாமிற்கு வெளியே ஒருவரை இலங்கை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்வது சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையில் இதுவே முதல் தடவை.

ஏகேடி என அழைக்கப்படும் திசநாயக்க அனுராதபுரத்தில் மிகவும் சாதாரண குடும்ப பின்னணியை கொண்டவர். அவரது கட்சியோ அல்லது கூட்டணியோ கடந்த காலத்தில் ஆட்சிக்கு அருகில் இருந்ததில்லை.

பொருளாதார நெருக்கடியின் போது வறிய ஏழ்மையான நிலையில் உள்ள இலங்கையர்கள் அனுபவித்த வலிக்கு இந்த தேர்தல் முடிவு ஒரு சான்று. ஊழலிற்கு எதிரான ஏகேடியின் போராட்டத்திற்கும், மக்களிற்கு அதிகளவு நலன்புரிசேவைகளை வழங்க வேண்டும் என்ற அவரது வேண்டுகோள்களிற்கும் பரந்துபட்ட ஆதரவுள்ளது.

தேர்தல் வெற்றியாளரின் பலவீனம் என்னவென்றால் அவரது கூட்டணிக்கு இலங்கை போன்ற ஒரு சிக்கலான அரசாங்கத்தை நிர்வகித்த அனுபவம் மிகவும் குறைவு. மிகவும் சவாலான பொருளாதார சூழலில் தங்களின் பல வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவது அவர்களிற்கு மிகவும் சவாலான விடயமாக காணப்படலாம்.

இந்த தேர்தல் முடிவுகள் வெளிநாடுகளின் தலைநகரங்கள் பலவற்றில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். இராஜதந்திரிகள் இரண்டு முறை சிந்திக்க வேண்டும்.

தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ஏகேடி இந்தியா சீனா மேற்குலகை நோக்கி தனது நேசக்கரங்களை நீட்டினார். நாங்கள் அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டு அவர் வெற்றிகரமான தலைவராக மாறுவதற்கு உதவவேண்டும்.

அதிக செழிப்பு மிக்க அமைதியான இலங்கையே அனைவரினதும் நன்மைக்கு உகந்த விடயம். இந்த பயணத்தில் ஏகேடிக்கு உதவ வேண்டும் . இலங்கையின் தேர்தல் பிரச்சாரத்தில் பேரினவாதமும் இன தீவிரவாதமும் நீண்டகாலத்தின் பின்னர் எந்த முக்கியத்துவத்தையும் பெறாத தேர்தல் இது.

இந்த தேர்தலின் அமைதியிலிருந்தும் தேர்தலில் தோல்வியடைந்த சஜித்பிரேமதாசவும் ரணில் விக்கிரமசிங்கவும் வெற்றி பெற்றவர் குறித்து வெளிப்படுத்திய நாகரீகத்திலிருந்தும் பல மேற்குலக நாடுகள் பாடங்களை கற்றுக்கொள்ளலாம்.

இலங்கை பொருளாதார ரீதியாக மிக மோசமான நெருக்கடியிலிருந்தவேளை அதிலிருந்து நாட்டை மீட்டவர் என ரணில்விக்கிரமசிங்க வரலாற்றில் பதிவு செய்யப்படுவார்.

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியமைக்காக உலக வரலாற்றில் எந்த தலைவரும் தெரிவு செய்யப்பட்டதில்லை.

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 25 353 வாக்குகள் நிராகரிப்பு!

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளாக 3 இலட்சத்து 97 ஆயிரத்து 41வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில், 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் பதில் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 688 செல்லுபடியான வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில், வேட்பாளர்களான சஜித் பிரேமதாச பிரேமதாச 1 இலட்சத்து 21 ஆயிரத்து 177 வாக்குகளும் பா.அரியநேந்திரன் 1 இலட்சத்து 16 ஆயிரத்து 688 வாக்குகளும் ரணில் விக்ரமசிங்க 84 ஆயிரத்து 558 வாக்குகளும் அநுரகுமார திஸாநாயக்க 27 ஆயிரத்து 086 வாக்குகளையும் பெற்றனர். ஏனைய வேட்பாளர்கள் மொத்தமாக 22 ஆயிரத்து 179 வாக்குகளையும் பெற்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை முழுவதும் ஜனாதிபதி தேர்தலில் 35 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வாக்களிக்கவில்லை என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# தமிழரசுக்கட்சி ஆதரித்த சஜித்திற்கு வடகிழக்கின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் முதலிடம்! 676,681 வாக்குகளைப் பெற்றார்!

இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆதரவளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வட, கிழக்கின் 5 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக 676,681 எனும் அதிகூடிய வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கின்றார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது எனும் விடயத்தில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்திருந்தன. அதன்படி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்திருந்தது.

அதற்கமைய இம்முறை தேர்தலில் வடக்கின் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களில் 216,599 வாக்குகளையும், கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திகாமடுல்லை தேர்தல் மாவட்டங்களில் 460,082 வாக்குகளையும் பெற்றதன் மூலம் சஜித் பிரேமதாஸ வட, கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 676,681 வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

வட, கிழக்கு மாகாணங்களில் சஜித் பிரேமதாஸ பெற்ற வாக்குகளை தேர்தல் மாவட்ட ரீதியாக நோக்குகையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 121,177 வாக்குகளையும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 95,422 வாக்குகளையும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 120,588 வாக்குகளையும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 139,110 வாக்குகளையும், திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் 200,384 வாக்குகளையும் பெற்றிருக்கிறார். அவர் பெற்ற இவ்வாக்குகள்



செல்லுபடியான வாக்குகளில் முறையே 32.60, 43.92, 50.36, 43.66, 47.33 சதவீதமாகும். இவ்வனைத்து தேர்தல் மாவட்டங்களி லும் சஜித் பிரேமதாஸ முன்னிலை வகிக்கும் அதேவேளை, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அரியநேத்திரன், ரணில் விக்ரமசிங்க, அநுரகுமார திஸா நாயக்க ஆகியோர் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களிலும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் ரணில் விக்ரம சிங்க, அரியநேத்திரன், அநுரகுமார திஸா நாயக்க ஆகியோர் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களிலும் உள்ளனர்.

அதேபோன்று திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் அநுரகுமார திஸா நாயக்க, ரணில் விக்ரமசிங்க, அரியநேத்திரன் ஆகியோர் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களிலும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் ரணில் விக்ரமசிங்க, அநுரகுமார திஸா நாயக்க, அரியநேத்திரன் ஆகியோர் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களிலும், திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் அநுரகுமார திஸாநாயக்க, ரணில் விக்ரமசிங்க, அரியநேத்திரன் ஆகியோர் முறையே 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடங்களிலும் இருக்கின்றனர்.

## ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் மிக அமைதியான தேர்தல் இதுவாகும்

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தலாகும். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை PAFFREL அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஹெட்டியாராச்சி, தேர்தல் சட்டத்தை மீறிய 108 சம்பவங்கள் பதிவாகியுள்ளதோடு, தேர்தலின் போது அரச சொத்துக்கள் துஸ்பிரயோகம் மிகவும் குறைவாகவே காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் (IGP) நாட்டில் இல்லாத போதும் தேர்தல்களை நடத்துவதற்கு பொலிஸார் சிறந்த ஆதரவை வழங்கியதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இவ்வருட ஜனாதிபதி தேர்தலில் 75வீத முதல் 80வீத வரையிலான வாக்குகள் பதிவாகியுள்ளதாக PAFFREL அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி தேர்தல் வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளின் போது தேர்தல் உத்தியோகத்தர்களால் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது. சில உத்தியோகத்தர்கள் விரும்பு வாக்குகளை எண்ண வேண்டிய அவசியம் வராது என நினைத்து முன்கூட்டியே வீடுகளிற்கு சென்றுவிட்டனர் என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்கரணவக்க இரண்டாவது விருப்புவாக்குகளை எண்ண வேண்டிய தேவையேற்பட்ட வேளை அதிகாரிகள் அவர்களை வீடுகளில் இருந்து அழைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர் என குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் சில இடங்களில் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்பட்டது. (8ம் பக்கம் பார்க்க)

In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)

Math & Physics Tutoring
(For High School Students)



Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழ் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் 226,343 வாக்குகளைப் பெற்றார்!



வட, கிழக்கின் 5 தேர்தல் மாவட்டங்களில் யாழில் இரண்டாம் இடம். ஏனைய மாவட்டங்களில் மூன்றாம், நான்காம் இடங்கள் ஒப்பீட்டளவில் திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் குறைந்த ளவு வாக்குகள்

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுக் கட்டமைப்பினரால் வட, கிழக்கு தமிழ் மக்களின் சார்பில் தமிழ் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் மொத்தமாக 226.343 வாக்குகளைப் பெற்றுள்ளார். இது செல்லுபடியான வாக்குகளில் 1.70 சதவீதமாகும்.

மிகக் காத்திரமானதாகக் கருதப்பட்ட இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் குறித்த சில தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறக்கியிருந்தன.

தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் அதேவேளை, தமிழர்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்குக் கூறும் நோக்கில் களமிறக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இப் பொதுவேட்பாளர் வட, கிழக்கு மாகாணங்களில் செலுத்தப்பட்ட வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேல், அதாவது சுமார் 700.000 வாக்குகளைப் பெற வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டன. இருப்பினும் போட்டித் தன்மை மிக அதிகமான இத் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் மொத்தமாக 226.343 வாக்குகளைப் பெற்றிருக்கிறார். அதன்படி அவர் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 116.688 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 36.377 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் இருக்கிறார். அவரால் பெறப்பட்ட இவ்வாக்குகள் செல்லுபடியான வாக்குகளில் முறையே 31.39, 16.74 சதவீதம் ஆகும்.

அதேபோன்று அரியநேத்திரன் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 18.524 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திலும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 36.905 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திலும், திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் 9.985 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திலும் இருக்கிறார். அவரால் பெறப்பட்ட இவ்வாக்குகள் செல்லுபடியான வாக்குகளில் முறையே 7.74, 11.58, 2.36 சதவீதம் ஆகும்.

மேலும் அரியநேத்திரன் வட, கிழக்கு மாகாணங்களில் தொகுதி வாரியாகப் பெற்ற வாக்குகளை நோக்குகையில் வடக்கில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வட்டுக்கோட்டையில் 11.170 வாக்குகளையும், காங்கேசன்துறையில் 5.726 வாக்குகளையும், மானிப்பாயில் 11.587 வாக்குகளையும், கோப்பாயில் 11.410 வாக்குகளையும், உடுப்பிட்டியில் 8.467 வாக்குகளையும், பருத்தித்துறையில் 8.658 வாக்குகளையும், சாவகச்சேரியில் 9.159 வாக்குகளையும் பெற்றிருக்கிறார்.

அடுத்ததாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் மன்னாரில் 10.757 வாக்குகளையும், வவுனியாவில் 11.650 வாக்குகளையும், முல்லைத்தீவில் 12.810 வாக்குகளையும் பெற்றிருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் சேருவிலில் 2.412 வாக்குகளையும், திருகோணமலையில் 11.300 வாக்குகளையும், மூதூரில் 4.381 வாக்குகளையும் பெற்றிருக்கும் அரியநேத்திரன், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்ததில் கல்குடாவில் 10.890 வாக்குகளையும், மட்டக்களப்பில் 12.758 வாக்குகளையும், பட்டிருப்பில் 12.356 வாக்குகளையும் பெற்றிருக்கிறார். மேலும் திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் அம்பாறையில் 28 வாக்குகளையும், சம்மாந்துறையில் 2.299 வாக்குகளையும், கல்முனையில் 2.623 வாக்குகளையும், பொத்துவிலில் 4.802 வாக்குகளையும் அரியநேத்திரன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரியநேந்திரனுக்கு வாக்களித்து தமிழ்த்தேசியத்தின் ஒற்றுமையை மக்கள் வலியுறுத்தியுள்ளார்களாம்



தமிழ் தேசியத்திற்காக ஓரணியில் திரள வேண்டும் என்பதை மக்கள் புகட்டியுள்ளனர் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளரும் ஊடக பேச்சாளருமான க. துளசி தெரிவித்தார். தமிழ் பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளருக்கு கிடைத்த வாக்கு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களில் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்கள் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை பறைசாற்றுவதோடு தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வை ஜனாதிபதியாக தெரிவு செய்கின்றவர் வழங்க வேண்டும் என்பதை கூறுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி வெற்றி அளித்திருக்கின்றது.

தமிழ் தேசிய வெற்றிக்காக ஒன்று திரள வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதற்கு தமிழ் மக்கள் ஒரு குறுகிய நாளில் ஒன்று திரண்டு சங்கு சின்னத்துக்கு வாக்களித்ததன் மூலமாக தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

மக்கள் சங்கிற்கு பெருவாரியாக வாக்களித்ததன் மூலம் தமிழ் அரசியல் களத்தில் உள்ளவர்கள் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதை இடித்துரைத்துள்ளனர்.

ஒற்றுமையாக தேசியத்திற்காக செயற்படும்போது போராளிகள் ஆகிய நாங்களும் இங்கு இருந்தும் புலம்பெயர் தேசத்தில் இருந்தும் அவர்களுக்கான ஆதரவை வழங்கி வெற்றிக்காக உழைப்போம். எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல்களிலும் அனைத்து தேர்தல்களிலும் இதே கூட்டணி ஒன்றுபட்டு செயல்படும்.

இதேபோல் தமிழ் தேசியத்தை சிதைவடையச் செய்து வெளியேறியவர்களும் ஒன்றாகி மீளவும் பலமான ஒரு கட்டமைப்பை உருவாக்கி எங்கள் தேசியத்தை வெளிப்படுத்த வேண்டும்.

சிங்கள தேசம் அப்போதெல்லாம் சிங்கள தேசியத்தை பெருவாரியாக வெளிப்படுத்தி இருக்கின்றதோ அப்போதெல்லாம் தமிழ் தேசியமும் பலம் அடைந்து உச்சம் பெற்று இருக்கின்றது.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதிக்கு எங்களுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு தமிழ் தேசிய இனத்தினுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் கோரி நிற்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

# தென்னிலங்கையிடம் நாம் பாடம் கற்க வேண்டும்

தென்னிலங்கை மக்கள் தமது தேசத்தின் தலைவனாக தற்பொழுது தேர்ந்தெடுத்துள்ள அனுர குமாரவுக்கு வயது 55.

அனுரவுக்கு அடுத்த நிலையில் அதிக வாக்குப் பெற்ற சஜித் பிரேமதாசவுக்கு வயது 57. அரசியல் களத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் இருவருமே இளைஞர்கள் தான்.

ஒப்பீட்டளவில் தென்னிலங்கை மக்கள் தங்களைத் தலைமை தாங்கும் பொறுப்புக்களை இளைஞர்களிடம் ஒப்படைக்க முன் வந்திருப்பது அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு மிகப் பெரிய மாற்றத்தின் அடையாளமாக நாம் பார்க்க வேண்டி இருக்கின்றது.

இலங்கையில் பொருளாதார சீரழிவுகள், ஊழல்கள் போன்ற நெருக்கடிகள் ஏற்பட்டபோது, தென்னிலங்கை இளைஞர்களே முன் வந்து அதற்கான தீர்வை நோக்கி நாட்டை இட்டுச் சென்றிருந்தார்கள்.

இன்றைக்கு நாட்டையும், நாட்டின் எதிர்காலத்தையும் இளைஞர்கள் கைகளிலேயே தென்னிலங்கை ஒப்படைத்தும் இருக்கின்றது. தமிழர்களும் அதனையே செய்யவேண்டும்.

தமிழர் தாயகத்தின் எதிர்காலத்தை, தமிழ் மக்களின் எதிர்காலத்தை இளைஞர்களிடம் ஒப்படைக்க முன் வரவேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவர்களாக இளைஞர்களையே முன்நிறுத்த வேண்டும்.

ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் மாவை சேனாதிராஜா எடுத்த நிலைப்பாடும், ஆடியிருந்த கூத்தும் ஒன்றே போதும் உதாரணத்துக்கு.

எம்மை வழி நடாத்திய எமது புதல்வர்கள் நாம் கனவில் கூட நினைத்துப் பார்க்காத சாதனைகளை எல்லாம் புரிந்ததை நேரில் கண்டு விட்டும் கூட, எமது இளைஞர்களை நம்பாது வயது முதிர்ந்தவர்களிடமே திரும்பவும் எமது தலைமை ஒப்படைத்து விட்டு, எமது அரசியல் எதிர் காலத்தை நோக்கிய பாதையில் ஒரு அங்குலம் கூட நகர முடியாபடிக்கு கடந்த 15 வருடங்களாகத் தடுமாறிக் கொண்டிருக்கின்றோம்.

தலைவர் பிரபாகரன் தமிழ் இனத்தின் தேசியத் தலைவராக பரினாமம் பெற்றபோது அவருக்கு வயது வெறும் 35 மாத்திரம்தான்.

குசையும், பொட்டம்மானும், பால்ராஜும், தீபனும் பிராந்தியத் தளபதிகளாக நியமிக்கப்பட்டு, பெரும் பெரும் வல்லரசு தேசங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்திய போது அவர்களுக்கு வயது வெறும் 21, 22தான்.

ஒரு இனத்தைத் தலைமை தாங்கி நடத்தக் கூடிய தகுதியும், பொறுப்புணர்வும், வல்லமையும், தமிழ் இளைஞர்களிடம் தாராளமாகவே இருக்கின்றது என்பதற்கு இவை வெறும் உதாரணங்கள் மாத்திரம் தான்.

தமிழ் இனம் தமது தம்மை தலைமை தாங்கி நடாத்துகின்ற பொறுப்பை, உணர்வை மறுபடியும் தமிழ் இளைஞர்களிடம் ஒப்படைக்க முன்வர வேண்டும்.

பெரியவர்கள், அனுபவஸ்தர்கள் இளைஞர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி, அவர்களுக்கு வழி காண்பிக்கின்ற வகிபாகத்தை வகிக்கவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியிலும் ஒரு 'அறகல' நடக்கும் வரை காத்திராமல் உடனடியாக அதனைச் செய்தாக வேண்டும்.

உணர்ச்சிக் கோஷங்களுக்கும் உசுப்பேத்தல்களுக்கும் உட்பட்டு நிதானம் இழந்து போகும் தமிழ் இளைய சந்ததி களத்திலும் புலத்திலும் இருக்கும் வரை தமிழினத்திற்கு இளைய தலைமுறை தலைமையேற்க தமிழ்இனம் தயாராக இருக்க மாட்டாது.

தலைவர் பிரபாகரனது வாழ்வும் போராட்டமும் வேறுபட்டது. அவர் போன்ற தலைவர்கள் உருவாகுவது வரலாற்று நிகழ்வு. வரலாற்றில் அபூர்வம்.

தன்னை மட்டுமல்ல தனது குடும்பத்தையே விடுதலைத் தீயில் ஆகுதியாக்கியவர். உலகமே சுற்றி வளைத்து விட்டது என்று தெரிந்த பின்னும் கலங்காது களமாடிய மாவீரன்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்கள் ஒரு தடவை குறிப்பிட்டார். 2500 ஆண்டுகளுக்குப் பின் தமிழர்களுக்குக் கிடைத்த மாவீரன் பிரபாகரன் என்று. அதுதான் உண்மை.

# இலங்கை தொடர்பான தீர்மானத்தை வாக்கெடுப்புடனோ வாக்கெடுப்பின்றியோ நிறைவேற்றுவது குறித்து ஆராய்வு!



இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 51-1 தீர்மானத்தைக் காலநீடிப்பு செய்யக்கோரி பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டுள்ள வரைபை வாக்கெடுப்புடனோ அல்லது வாக்கெடுப்பின்றியோ நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமானது. அன்றைய தினம் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் உரை மற்றும் மியன்மார் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான எழுத்துமூல அறிக்கை, அதன்மீதான விவாதம் என்பவற்றைத் தொடர்ந்து இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

அதன்படி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51-1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் என்பன தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து உயர்ஸ்தானிகரின் அறிக்கை தொடர்பில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றியதுடன் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் இயங்கி வரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. அவ்வறிக்கைகளில் இலங்கை தொடர்பாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51-1 தீர்மானத்தின் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்கக்கூடியவகையில் அத்தீர்மானத்தைப் புதுப்பிக்குமாறு பேரவையிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இலங்கை தொடர்பில் 46-1 தீர்மானம், பின்னர் 51-1 ஆகக் காலநீடிப்புச் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிலையில், அத்தீர்மானம் இம்மாததத்துடன் முடிவுக்கு வருகிறது. அதனையடுத்து புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வருவது பற்றி முன்னர் ஆராயப்பட்ட போதிலும், இலங்கையில் இது தேர்தல் ஆண்டு என்பதால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குக் காலநீடிப்புச் செய்வதற்கான சாத்தியப்பாடு குறித்து பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் ஆராய்ந்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மாலாவி, வட மெசிடோனியா மற்றும் மொன்டெனிக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகளின் ஏற்பாட்டில் இலங்கை தொடர்பான 51-1 தீர்மானத்தைக் காலநீடிப்புச் செய்வது குறித்தும், அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் வியாழக்கிழமை (19) பேரவையில் (பக்க அறையில்) ஆராயப்பட்டது.

இதில் இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள், உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவற்றின் செயற்பாட்டாளர்களுடன் இலங்கையைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பிலான முதல் வரைபு குறித்தும், அதனை வாக்கெடுப்புடனோ அல்லது வாக்கெடுப்பின்றியோ நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடு குறித்தும் ஆராயப்பட்டது.

அதேவேளை இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51.:1 தீர்மானத்தின் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட ஆணையை நீடிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ள இவ்வரைபில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருப்பின், அத்திருத்தங்களுடன் கூடிய இறுதி வரைபு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் வாரத்தில் வெளியிடப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் இத்தீர்மானத்தை வாக்கெடுப்புடன் நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்படின், இறுதி வரைபை அடிப்படையாகக் கொண்டு சிவில் சமூக அமைப்புக்கள் உறுப்பு நாடுகளுடன் வாக்குகளைக் கோரி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் எனத் தெரிவித்துள்ளது

## ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில்....

(6ம் பக்கத் தொடர்ச்சி) 42 வீத வாக்குகளை பெற்றமைக்காக தேசிய மக்கள் சக்தியை பாராட்டியுள்ளதுடன் 58 வீதமான வாக்காளர்கள் அவர்களிற்கு எதிராக வாக்களித்துள்ளனர் என்பதை நினைவுபடுத்தியுள்ளார். இந்த விதி முறை மீறல்கள் குறித்து விசாரணைகளை தனது கட்சி கோரலாம் என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# யார் இந்த அநுரகுமார திஸாநாயக்கா? தமிழர் விவகாரங்களில் அவரது நிலைப்பாடு என்ன?

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார்.

### அவர் யார்? அவரது பின்னணி என்ன?

அநுராதபுரம் மாவட்ட தம்புத்தேகம பகுதியில் 1968ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் தேதி அநுர குமார திஸாநாயக்க பிறந்தார். தம்புத்தேகம கமினி மகா வித்யாலயாவிலும் தம்புத்தேகம மத்திய கல்லூரியிலும் படித்த அநுர குமார திஸாநாயக்க, அங்கிருந்து பேராதனை பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

பாடசாலை காலத்தில் இருந்தே அரசியலில் அநுர குமாரவுக்கு அதிக ஆர்வம் இருந்தது. தனது 19வது வயதில் இலங்கையின் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் இடதுசாரிக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவில் இணைந்தார். ஒரு கட்டத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி, களனி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

கடந்த 1995ஆம் ஆண்டு வாக்கில் அவரை சோஷலிச மாணவர் அமைப்பின் தேசிய அமைப்பாளராக ஜே.வி.பி. நியமித்தது. அக்கட்சியின் மத்திய பணிக் குழுவிலும் அவருக்கு இடமளிக்கப்பட்டது.

கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனதா விமுக்தி பெரமுனவின் தேசிய பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்தில் நுழைந்தார் அநுர குமார. 2001ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்.

கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. 39 இடங்கள் அக்கட்சிக்குக் கிடைத்தன. குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க 1,53,868 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து ஆட்சி அமைத்தன. இந்த அரசாங்கத்தில் விவசாயம், கால்நடைகள், காணி, நீர்ப்பாசனத் துறை அமைச்சராக அநுர குமார பதவியேற்றார். ஆனால், சுனாமிக்குப் பிறகு, வடக்கிலும் கிழக்கிலும் புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சந்திரிகா குமாரதுங்க அரசு முடிவு செய்த போது, அதை எதிர்த்து ஜே.வி.பி. அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகினர். அநுரவும் பதவி விலகினார்.

கடந்த 2014ஆம் ஆண்டு நடந்த ஜே.வி.பியின் தேசிய மாநாட்டில், அக்கட்சியின் புதிய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார் அநுர குமார. அதைத் தொடர்ந்து, மக்கள் விடுதலை முன்னணி தலைமையில் 2019ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி 2019ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க முதல் தடவையாகப் போட்டியிட்டார். வெறும் சுமார் 3 சதவீத வாக்குகளுடன் மூன்றாவது இடத்தையே பிடித்தார் அவர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸ தேர்வான நிலையில், ஊழலுக்கு எதிராக அநுர குமார திஸாநாயக்க தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்தார். இதனால், அவருக்கான ஆதரவுத்தளம் வலுவடைய ஆரம்பித்தது. மேலும் பொருளாதார நெருக்கடியின் போது நடந்த போராட்டங்களிலும் அநுர குமார முன்னணியில் இருந்தார். இந்த நிலையில், 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் அநுர குமார திஸாநாயக்க போட்டியிடுவதாக அறிவித்தார்.




அவருக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் திரண்டனர்.

### வன்முறைகளுக்கு மன்னிப்பு

அநுர குமார திஸாநாயக்கவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில், கடந்த காலங்களோடு ஒப்பிட்டால் பெருமளவு கூட்டம் திரண்டது. கடந்த தேர்தலில் வெறும் 3 சதவீத வாக்குகளைப் பெற்ற ஒருவர், 2024 ஜனாதிபதி தேர்தலில் அதிக வாக்குகளுடன் முதலிடத்தில் இருப்பது பலரது புருவங்களையும் உயர்த்தியது.

தற்போது அவர் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் சார்பில் போட்டியிட்டிருந்தாலும் அவர் தலைமை வகிக்கும் ஜனதா விமுக்தி பெரமுனவின் கடந்த காலம் வன்முறைகளால் நிறைந்தது. கடந்த 1971இல் பண்டாரநாயக அரசுக்கு எதிராக ஜே.வி.பி. நடத்திய கிளர்ச்சியில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். அதே போல, 1987 - 89 காலப் பகுதியில் இந்தியா - இலங்கை அமைதி ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி. நடத்திய கலகத்திலும் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.

ஆனால், 2014இல் ஜே.வி.பியின் தலைவரான பிறகு பிபிசிக்கு அளித்த பேட்டியில் அக்கட்சியின் கடந்த கால வன்முறைகளுக்காக மன்னிப்பு கோரினார் அநுர. அக்கட்சி இலங்கையில் நிகழ்த்திய வன்முறைகளுக்கு மன்னிப்பு கோரியது அதுவே முதலும் கடைசியுமாக இருந்தது.

### தமிழர் பிரச்சனையில் நிலைப்பாடு?

இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரத்தை அளிப்பதற்காக 13வது சட்டத் திருத்தம் இலங்கையின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்டது. நிலம், காவல் மற்றும் நிதி தொடர்பாகக் கூடுதல் அதிகாரத்தை இந்த சட்டத் திருத்தம் மாகாண சபைகளுக்கு அளிக்கிறது. ஆனால், இதுவரை மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வடக்கு கிழக்கு பகுதிகளுக்குப் பயணம் செய்த அநுர குமார, யாழ்ப்பாணத்தில் பேசினார். அப்போது, 'நான் 13வது சட்டத் திருத்தத்தைச் செயல்படுத்துகிறேன். பதிலுக்கு எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்க நான் வரவில்லை. கூட்டாட்சி முறையை அளிக்கிறேன், எனக்கு வாக்களியுங்கள் எனக் கேட்க வரவில்லை' என்றார். இது அந்தத் தருணத்தில் தமிழர் தரப்புக்கு ஏமாற்றத்தையே அளித்தது. ஆனால், தேர்தலுக்கு நெருக்கமாக அநுர குமார தனது நிலைப்பாட்டை சற்று மாற்றிக் கொண்டார். ஜீன் மாதத்தில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்து தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார் அநுர. அந்த சந்திப்பிற்குப் பிறகு பேசிய அவர், மாகாண சபைகள் தொடர்ந்து செயல்படும் எனக் கூறினார்.

ஆனால், மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவது பற்றி அவர் ஏதும் தெரிவிக்கவில்லை. மேலும், ஜனதா விமுக்தி பெரமுனவை பொறுத்தவரை, அது நீண்ட காலமாகவே அதிகாரப் பகிர்வை எதிர்த்து வருகிறது. ஆனால், தற்போதைய புதிய சூழலில் அக்கட்சி என்ன செய்யும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### அதானி திட்டத்திற்கு எதிர்ப்பு

இரு நாட்டு உறவுகளைப் பொறுத்தவரை, இந்தியா - சீனா ஆகிய இரு நாடுகளுமே இலங்கைக்கு மிக முக்கியமானவை. இரு நாடுகளுமே இலங்கைக்கு மிகப்பெரிய அளவில் கடனுதவிகளைச் செய்திருக்கின்றன. ஜே.வி.பி ஒரு இடதுசாரி கட்சியாக இருப்பதால், இயல்பாகவே சீனாவுக்கு நெருக்கமாக இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. மேலும், மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரத்தை வலியுறுத்தும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து எதிர்த்து வருகிறது ஜே.வி.பி. இந்த ஒப்பந்தம் இலங்கை மீது இந்தியாவால் திணிக்கப்பட்டதாகவும் கருதுகிறது.

செப்டம்பர் 16ஆம் தேதியன்று ஒரு அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்ற அநுர, அதானி குழும முதலீட்டில் உருவாகும் காற்றாலை மின் திட்டத்தை ரத்து செய்வோம் என்று கூறினார். அந்தத் திட்டம் இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்றும் கூறினார். ஆனால், இந்தத் திட்டத்தில் கூடுதல் விலைக்கு மின்சாரம் இலங்கைக்கு விற்கப்படும் என்பதாலேயே அதற்கு எதிராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் பிராந்தியத்தில் உள்ள எந்த சக்திகளையும் பகைத்துக் கொள்ள மாட்டோம் என அக்கட்சியினர் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். அநுர குமாரவும் இந்தியாவுக்கு வந்து சென்றார். ஆகவே, வரும் நாட்களில் இந்தியா தொடர்பான, அவரது அணுகுமுறை என்னவாக இருக்கும் என்பது தெரிய வரும்.

அநுரவை பொறுத்தவரை, ஒரு கடினமான உழைப்பாளி என்பதில் சந்தேகமில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெறும் 3 இடங்களைப் பிடித்த கட்சியின் சார்பில் போட்டியிட்டு ஜனாதிபதி பதவியை கைப்பற்றியுள்ளார். இலங்கை தற்போது எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளையும் இதே தீவிரத்தோடு எதிர் கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். நன்றி:- பிபிசி

T.S.A Meat Store
உடன் இறைச்சி
விநியோகம்
ஸ்ரீ 647.328.8880
சானு 416.456.3051

பிறந்தநாள், ஊர் ஒன்றுகூடல்கள்,
வீட்டுக் கொண்டாட்டங்கள் மற்றும் உங்கள்
வீட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு
ஊர் ஆட்டிறைச்சி
சிறு சிறு துண்டுகளாக மொத்தமாகவும்
சில்லறையாகவும் துப்பரவாக வெட்டிக் கொடுக்கப்படும்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 செப்டம்பர் 2024 –27 செப்டம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினசிங்கம் மதியழகன்

புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இரத்தின சிங்கம் மதியழகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### செல்வன் சரண் செல்வகுமார்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் சரண் செல்வகுமார் (Bsc) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 18 செப்டம்பர் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பெற்றோர்கள், உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் சரண் செல்வகுமார் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது பெற்றோர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லத்துரை பூவின்பராணி

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம்பர் 2024 திங்கள் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அன்றைய தினம் திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னையா செல்லம்மா

இருபாலை கோப்பாயைச் சேர்ந்த திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள் அன்றைய தினம் திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மநாதன் கனகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது, 24வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு செல்லர் மார்க்கண்டு
### திருமதி மனோன்மணி மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2024 வெள்ளிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



07 செப்டம்பர் 2024சனிக்கிழமை கனடாவாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தின் 22வது ஆண்டு ஞானதீபம் கலைவிழா அன்பளிப்பாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



08 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவைச் சேர்ந்த திரு திருமதி மயூரன் ஜெனிரா இணையர்களது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



14 செப்டம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசுக்கும் திரு திருமதி விவேக் சோபனா இணையர்களது செல்வப்புல்வி மீரா விவேக்கின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மீராவும் அவரது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



17 செப்டம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



18 செப்டம்பர் 2024 புதன்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் சரண் செல்வகுமார் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 செப்டம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் இனம், மொழி, சமூகநலன் ஆர்வலர் - புரவலர் திரு சங்கர் நல்லதம்பி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



22 செப்டம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் இனம், மொழி, சமூகநலன் ஆர்வலர் - புரவலர் திரு சங்கர் நல்லதம்பி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



22 செப்டம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் இனம், மொழி, சமூகநலன் ஆர்வலர் - புரவலர் திரு சங்கர் நல்லதம்பி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



23 செப்டம்பர் 2024 திங்கட்கிழமை திருகோணமலையைச் சேர்ந்த திருமதி பூவின்பராணி செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



24 செப்டம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி முருகநாதன் நவமணி தம்பதிகளின் செல்வப்புதல்வி மதுரா முருகநாதனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மதுரா முருகநாதன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



27 செப்டம்பர் 2024 வெள்ளிக்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்தவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 12வது ஆண்டு நினைவாகவும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 24வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் பாரது இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



22 செப்டம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் சமூக சேவையாளரும் வர்த்தகப் பிரமுகருமான திரு சங்கர் நல்லதம்பி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் தனது இல்லத்தில் மிக எளிமையாக குடும்பத்தினருடன் பிறந்த நன் நாளைக் கொண்டாடும் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் அன்றைய தினம் எமது அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். இனிய பிறந்த நன்நாளைக் கொண்டாடும் திரு சங்கர் அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது உறவுகளுடன் இணைந்து ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



கனடாவில் வசிக்கும் சமயத் தொண்டரும் இன நல ஆர்வலரும் சமூகத் தொண்டரும் முன்னாள் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவரும் ஈழநாடு பத்திரிகையின் நல் நோக்கங்களுக்கு உறுதுணையாகவும் பக்கத் துணையாகவும் நின்று பணியாற்றும் திரு சோம.சச்சி அவர்கள் 22 செப்டம்பர் 2024 சனிக்கிழமை தனது பிறந்த நன்நாளை தனது இல்லத்தில் குடும்பத்தினருடன் அமைதியாகக் கொண்டாடுகின்றார். சச்சி அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது குடும்பத்தினர், உறவுகள், நண்பர்களுடன் இணைந்து ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்

# இயல்–இசை–நாடகம்

## இரண்டு நாட்கள்

SEPTEMBER 28 SATURDAY 6:00 PM

SEPTEMBER 29 SUNDAY 6:00 PM

கல்லூரி கீதம்

சொல்லாடல்
எந்த திருமணம்?

நகைச்சுவை
கனடாவில் சக்கடத்தார்

நாடகம்
மீதினிலும் வாழ்வு

கனடிய இசை வல்லுனர்களின்
இசை இன்பம்

கவிதாநிகழ்வு
வாக்குமூலம்

நடனம்
இது நிஜமாகுமா?

முற்றிலும் புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்

# வானவில் 2024

**Armenian Youth Centre**
50 Hallcrown Pl. North York, M2J 1P6

தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464

கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு



கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்



yugam radio
yugam TV

CTAA
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION



நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்

கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்

20வது ஆண்டு
# நாடகப் பெருவிழா 2024

சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை

SATURDAY OCT 19 @4:30PM

**Toronto Pavilion**
190 Railside Rd,
North York, ON M3A 1A3

நிகழ்ச்சி தொகுப்பாளர்
ராம் பிரசாந்



TICKETS: $20

Ravi 416-898 7284 / Ruby 416-670-6522



SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104



## ANNUAL GENERAL MEETING / ELECTION 2024

TO ALL ACTIVE MEMBERS OF SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO

The 29th Annual General Meeting (AGM) of Sri Ayyappa Samajam of Ontario will be held on Saturday October 19, 2024 from 10:00am to 1:00pm.
The venue for the meeting will be
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8.
Election for 3 (Three) new Board of Directors for 2024 will be held on Saturday, October 26, 2024, between 10 Am to 2 PM at Canada Sri Ayyappan Temple, Hall 2.
Nomination kit can be collected from the office from October 1, 2024 and submit the completed kit latest by October 10, 2024 by 12.00 noon.
For further details, please contact the temple – 416-321-6104 / 416-321-7558 - *Board of Directors*

## வருடாந்த பொதுக்கூட்டம் / தேர்தல் 2024

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜம் ஒப் ஒன்ராறியோவின் 29வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 19-10-2024 சனிக்கிழமை காலை 10.00 முதல் பகல் 1:00 மணிவரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெறும்.
2024ஆம் ஆண்டுக்கான மூன்று (3) நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்), 26-10-2024 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல், பகல் 2:00 மணிவரை ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம் - 2 இல் இடம்பெறும்.
முக்கிய குறிப்பு: விண்ணப்ப பத்திரம் ஒக்டோபர் 1, 2024 முதல் ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்,
முடிவு தேதி அக்டோபர் 10, 2024 நண்பகல் 12:00 மணி.

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும். *அறங்காவலர் சபையினர்* : 416.321.6104, 416.321.7558


SEP 28 2024
SATURDAY @ 5:30 PM
VIBRANT HOSPITALITY GROUP
WORLD ACTION FOUNDATION
Punch Sockalingam
BROKER
416.786.2463
நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
நந்தா உணவகம்
NANTHA TAKEOUT & CATERING
timeFM
416 613 9515
CTS BUILDING SUPPLIES LTD
TIMBER MART
733 Progress Ave, Scarborough, ON M1H 2W7
SEVENOTES
Rahul Nambiar
PLAYBACK SINGER
Janani Bharadwaj
PLAYBACK SINGER
ஊடகப்போராளி
MEDIA WARRIOR
வழங்கும்
9TH ANNUAL
EASY Entertaining Night
2024
Thamil Isai Kalaamanram
Unit# 3, 1120 Tapscott Road, Scarborough, Ontario M1X 1E8
For Info: 416-414-5562 | easy24newskiruba@gmail.com
416-615-4646
HDAV
SOUND · LIGHTING · STAGE · VIDEOWALL
MOBILE STAGE RENTAL
BUY | INVEST | SELL
RE/MAX
RAJEEV
905.226.8515
EAST-WEST
289-660-7500
TOP PRODUCER
Abi
Amal
416.732.1810
416.829.9993
GREEN
RE/MAX
JENITHA LENIN
Salesperson
416-721-5100
Frontier
International Women's Day
Pakee
647 505 2254
Sassy
647 886 3814
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
FREE Home Valuation
Shan Thayaparan
416-567-7675
THIVIYA RATNARAJAH
647-280-5698
RE/MAX
Vaheesan
Jeyaveerasingam
Dir: 416.276.9999
ARABI
RAGEEF SUBRAMANIAM
CHRISTEEN SEEVARATNAM
VIA cibo
808 York Mills Rd, Toronto, ON M3B 1X8
(647) 352-7556
JRB
R.R.Rajkumar
647-289-6164
PACE LAW
Poorany Sornabala
647-968-7059
Ambika Jewellers
Hot Line
416.620.0008
SANTHA PANCHALINGAM
THAYA
416.356.2013
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
LAKERIDGE
647-448-9266
Kajan Kasippillai
416-930-4608
DHURGA
416-802-9782
ARTREUM HOMES INC.
416 900 6000
Senthil
Sabarina
GRAND
RE/MAX
Raj Nadarajah
RE/MAX EXCEL
MG MOTORS
416-616-4054
Krishna Punniyam
YOUR FRIENDLY NEIGHBORHOOD REALTOR
416-558-2551
JAY NADARAJAH
Sales Representative
INCOME TAX SERVICE
HAYHER & VASAN
CAOUTHAMVASAN
905-461-1515
416.261.1944
ignite
JEEVA KANDIAH
JAY RETNAM
ABS-MR.SINGARAJ
N.K.S
KETHA
416 321 6420
SRC
Scarborough Rehabilitation Clinic
2950 Eglinton Ave E #4, Scarborough
416 - 335-1424
JAASMIN
Mary's Bridal Creation
AQUA WELLNESS
2425, Eglinton Ave E. Scarborough ON
arotech
solutions inc.
416-509-5284
www.arotechsolutions.ca
31 Tapscott Road,Toronto, ON M1B 4Y7
ARI A. ARIARAN
CPA
RE/MAX
OMMIRA Jewellery
416-754-7198
JAY Professional Truck Training Centre
416-771-8041 & 416-299-9638
A&T
Human Resources
(416)431-0644
1080 Tapscott road, Suite 28 Scarborough

அனுராவின் வெற்றியை ஏற்றுக் கொள்ள முடியாமல் தமிழ் அதிகார வர்க்கத்தினர் பலர் சமூக வலைத்தளங்களின் பிதற்று கின்றனர். உங்களுக்கு ரணில் நல்லவர் சஜித் நல்லவர், சரத் பொன்சேகா நல்லவர் சஜித்தோடு இருந்த ஜி.எல். பீரிஸ் நல்ல வர். ஆனால் அனுரா இனவாதி வடக்கு கிழக்கை பிரித்த கட்சியைச் சேர்த்தவர்.

ரணில் சஜித் சரத் பொன்சேகா ,சஜித் தோடு இருந்த ஜி.எல்.பீரிஸ் எல்லோ ரும் வடக்கு கிழக்கிலே தேனும் பாலும் ஓட விட்டவங்களா?

விடுதலை புலிகள் இஸ்லாமியர்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதை வைத்துக் கொண்டு அது தவறு என்பதை புலிகள் ஏற்றுக் கொண்ட பின்பும் இன்றளவும் புலிகள் எங்களை இன சுத்திகரிப்பு செய்தவர்கள் பயங்கர வாதிகள் என்று பரப்புரை செய்து கொண்டிருக்கும் இஸ்லாமிய அடிப் படை வாதிகளுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது .உங்களுக்குள் யாரும் பிரதேச வாதிகள் இல்லையா? சாதி வெறியர்கள் இல் லையா?

ஸ்ரீலங்காவிலே முதல் தடவையாக இன வாதத்தை மூலதனமாக வைக்காமல் ஒருவர் தேர்தலிலே வென்றிருக்கிறார். சிங்கள இளைய தலை முறை மாற்ற த்தை விரும்புகிறது . ஆனால் நீங்கள் மாற மாட்டோம் என்று அடம் பிடிக் கிறீர்கள்

1971இல் நடத்திய ஆயுத போராடத்திலே அவர்கள் 13000 பேரை இழந்தார்கள். அதன் பின் மீண்டெழுந்து 1987-89 இல் நடத்திய ஆயுத போராட்டத்திலே 60000 பேரை இழந்தார்கள் .அவர்களது தலைவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டார் கள். அதன் பின்பும் அவர்கள் மீண்டு வந்தார்கள்.

ஆயினும் எங்களுக்குள் இருந்ததை போலச் சில புல்லுருவிகள் அவர்களுக் குள்ளும் ஆதிக்கம் பெற்றதால் தடம் புரண்டு விழுந்து எழும்பினார்கள் பின் னர் தங்களது தவறுகளிலிருந்து படிப் பினைகளை பெற்று தங்களை மறு சீரமைத்துக் கொண்டு இன்று வெற்றி யடைந்திருக்கிறார்கள்.

தற்போது அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ள கலாநிதி லயனல் போபகே தெரிவித்துள்ள கருத் துக்களை படித்துப் பாருங்கள்.

கலாநிதி லயனல் போபகே, ரோஹன விஜேவீர தலைமையிலான ஜேவிபி இன் முதலாவது பொதுச் செயலாளரக இருந் தவர் இருவரும் சம காலத்தவர்கள் மற்றும் ஒரே மாதிரியான சமூகப் பின்னணியை கொண்டவர்கள்.

இவர்கள் இருவரும் 1947 பாராளு மன்றத் தேர்தலின் போது மாத்தறை மாவட்டத்தில் யுஎன்பி ஆதரவாளர் களால் நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பாதிப்புகளை எதிர் கொண்ட கம்யூனிஸ்ட் குடும்பங்களின் வாரிசுகள்.

1960 களில் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் மாணவராக இருந்த போபகே ஜேவிபி அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். 1971 கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுப வித்தார் .

பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையில் தோற்றுவதற்கென 1972இல் கண்டி போகம்பரை சிறைச்சாலையிலிருந்து அவர் பேராதனைக்கு அழைத்துச் செல் லப்பட்டார்.

மீண்டும் 1983 இல் 'தமிழர்களுக்கெதி ரான வன்முறையைத் தூண்டினார்கள்' என்ற பொய் குற்றச்சாட்டின் பேரில் ஜே ஆர் அரசாங்கத்தினால் கைது செய்யப் பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட 21 இடது சாரி செயற்பாட்டாளர்களில் அவரும் ஒருவர்.

கறுப்பு ஜீலை அட்டூழியங்கள் தொடர் பாகச் சிரில் மத்தியூ மற்றும் காமினி திஸாநாயக்க போன்றவர்களைக் கைது செய்து, சிறையில் அடைக்காமல்

# JVP திருந்தி விட்டதா? பொறுத்திருந்து பார்க்கலாமா?

எங்களைக் கைது செய்தது ஏன்? யுஎன்பியைத் தடை செய்வதற்குப் பதிலாக, ஜேவிபியை தடை செய்தது ஏன்' எனக் கேட்டு, அச்சந்தர்ப்பத்தில் பொலிஸாருடன் வாதிட்டதை நினைவு கூருகிறார் போபகே.

ஆனால் இரண்டு முதன்மையான விடய ங்களின் அடிப்படையில் ரோஹன



விஜேவீரவுடன் முரண்பட்டுக் கொண்ட அவர் 1983இல் தனது பொதுச் செயலா ளர் பதவியை ராஜினாமா செய்து, ஜேவிபி இலிருந்து வெளியேறினார். சிறுபான்மை இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுத்தமை மற்றும் ஜேவிபி மீண்டும் வன் முறையை ஓர் அரசியல் ஆயுதமாகக் கையில் எடுத்திருந்தமை ஆகிய இரண்டு நிலைப்பாடுகள் தொடர்பாக விஜேவீரவுக்கும், அவருக்குமிடையில் கடுமையான கருத்து முரண்பாடுகள் தோன்றின.

அந்த நிலையில் கட்சியிலிருந்து வெளி யேறுவதைத் தவிர அவருக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை அதன் பின்னர் தொடர்ந்து ஜேவிபி இன் மீது அவர் கடுமையான விமர்சனங்களை முன் வைத்து வந்திருக்கிறார்.

தற்போது அவுஸ்திரேலியாவின் மெல் பேர்ன் நகரில் வசித்து வரும் கலாநிதி லயனல் போபகே 'இலங்கையில் ஜன நாயகத்துக்கான குரல்' என்ற தன்னார்வ அமைப்பை நடத்தி வருகிறார். இந் நாட்டில் வாழ்ந்து வரும் மொழிச் சிறுபான்மையினர் மற்றும் விளிம்பு நிலைச் சமூகங்கள் ஆகியோரின் அரசியல், கலாசார உரிமைகளுக்காக அந்த அமைப்பு தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

தற்போது நாடு திரும்பியிருக்கும் அவர் ஒரு யூ டியூ ப் தளத்தில் பேராசி ரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிரியுடன் நடத்திய விரிவான உரையாடலொன்றில் இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரங்கள் குறித்து தனது கருத்து க்களை பதிவு செய்திருக்கிறார்.

'தேசிய இனப் பிரச்சினை தொடர்பான ஜேவிபி நிலைப்பாடு மற்றும் அதன் வன்முறைச் சாய்வு ஆகிய இரண்டு முக்கியமான விடயங்களின் அடிப்படை யில் நீங்கள் 1983இன் பின்னர் அக் கட்சியிலிருந்து வெளியேறி, அதன் மீது கடுமையான விமர்சனங்களை முன் வைத்து வந்திருக்கிறீர்கள்.

ஆனால், இன்று ஜேவிபியின் புதிய அவதாரமான தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறீர்கள். இது ஏன் என விளக்க முடியுமா''? என்ற கேள்விக்குப் பதில் அளித்த அவர் -

தேசிய இனப் பிரச்சினை மற்றும் வன் முறை ஆகிய விடயங்கள் தொடர்பான என்னுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இலங்கையில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் அவற்றுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பெற்று, சமத்துவமான பிரஜைகளாகக் கண்ணியத்துடன் வாழக்கூடிய ஒரு சூழல் நாட்டில் உருவாக வேண்டும் என்பதே எனது அவா.'

2016 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பான ஜேவிபி யின் அணுகுமுறையில் படிப்படியான ஒரு மாற்றம் ஏற்பட்டு வருவதை அவ தானித்திருக்கிறேன். இப்பொழுது அந்த அணி 'சுய நிர்ணய உரிமை' என்ற வார்த்தையை நேரடியாகக் கூறா விட்டாலும் கூட, தமிழ் மக்களையும் உள்ளிட்ட இலங்கையின் சிறுபான்மை சமூகங்கள் அவற்றுக்கே உரிய தனித்து வமான பிரச்சினைகளைக் கொண்டிரு க்கின்றன என்ற விடயத்தையும், அப் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் புறம்பான விதத்தில் கையாளப்பட வேண்டும்



என்ற விடயத்தையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்ற து. அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வழிமுறைகளை அவர்கள் விரிவாக விளக்கிக் கூறா விட்டாலும் கூட அதுவே ஒரு குறிப்பிட்டுச் சொல் லக்கூடிய மாற்றம் என நான் நினைக் கிறேன்'.

மேலும் இன்று தேசிய மக்கள் சக்தி பல முற்போக்கு அமைப்புகளையும், குழுக் களையும், பன்முகப்பட்ட தொழில் வாண்மையாளர் கழகங்களையும் உள் வாங்கிய ஒரு பரந்த முன்னணியாக எழுச்சியடைந்திருக்கின்றது.'

மாகாண சபைகள் தொடர்பாக NPP இன்னமும் ஒரு சில மாற்றுக் கருத்து க்களை கொண்டிருந்த போதிலும், 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும் என்ற விடய த்தை அது ஏற்றுக் கொள்கின்றது.

குறிப்பாக, தமிழ் தரப்புடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு, அவர்கள் எதிர் கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கண்டறி யப்பட வேண்டும் என்றும் அது கருது கிறது.' என்று கூறினார்.

பழைய ஜேவிபி இப்பொழுது என்பிபி என்ற முகமூடியுடன் களமிறங்கியிரு க்கிறது. அது எந்த ஒரு நேரத்திலும் மீண்டும் வன்முறையைக் கையில் எடுக்க முடியும் என ஒரு சில விமர் சகர்கள் கூறி வருவதை எப்படிப் பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்குப் பதில ளித்த அவர்,

இலங்கை சமூகத்தின் அனைத்துத் தரப்புக்களையும் உள்வாங்கி ஒரு பாரிய மக்கள் இயக்கமாக எழுச்சியடைந் திருக்கும் தேசிய மக்கள் சக்தி இனி மேல் எந்தவொரு காரணத்திற்காகவும் வன்முறையை நாட வேண்டிய தேவை அறவே இருந்து வரவில்லை' என ஆணித்தரமாகக் கூறினார்.

1987 - 1989 கிளர்ச்சியின் போது ஜேவிபி ஒரு தீவிர சிங்கள தேசியவாத நிலைப்பாட்டை எடுத்திருந்தது. அந்தப் பின்னணியிலேயே வன்முறைகள் நிகழ்த்தப்பட்டிருந்தன. ஆனால், இன் றைய என்பிபி யில் அந்தக் கருத்தியலு க்கு இடமில்லை. என்கிறார் கலாநிதி போபகே. கடந்த 75 வருட நாடாளு மன்ற அரசியல் வரலாற்றில் தமிழினம் சந்தித்த இன்னல்களுக்குச் சிங்கள பௌத்த இனவாத தலைவர்கள் மட்டு மல்ல அவர்களோடு திரை மறைவில் இரகசிய கூட்டு வைத்திருந்த தமிழ் தலைவர்களும் காரணமாகும்.

கடந்த 75வருட அரசியல் வரலாற்றில் மாறி மாறி பதவிக்கு வந்த சிங்கள் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போன்ற கட்சிகளை ஆதரித்தும் ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி தோல்வி கண்ட தமிழர் தரப்புக்கு இன்றைய இளைய தலைமுறையின் மாற்றமும் ஏமாற்றம் அளிப்பதாகவே தெரியும்.

ஆனால் 2009 யுத்தம் முடிவுற்ற பின்னர் எந்தவொரு வலிமையும் அற்ற - பேரம்பேசும் ஆற்றல் அற்ற- ஒழுங்கான தலைமையற்ற ஒரு இனமாகவே வாழ் ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலை யில் இலங்கையில் ஒரு மாற்றம் ஒன்றை விரும்பிய சிங்கள மக்கள் ஜே.வி.பியை பதவியில் அமர்த்தியுள்ளார்கள்.

இவர்கள் தமிழ்மக்களை அரவணைத்து அவர்களது நியாயபூர்வமான உரிமை களை வழங்கி நாட்டை முன்னேற்று வார்களா? என்பதை கொஞ்சக் கால மாவது நாம் பாறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# புதிய ஜனாதிபதியும் இந்தியாவும்

**இக்கட்டுரை 22 செப்டம்பர் 2024 அன்று எழுதப்பட்டது என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்க**

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து விட்டது. தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கும் சூழலில் அடுத்த ஜனாதிபதி யார் என்பது இந்தப் பத்தி வெளிவருகின்ற போது ஓரளவுக்கு தெரிந்திருக்கும் அல்லது இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை செல்ல வேண்டிய நிலை இருந்தால் தெளிவற்ற ஒரு சூழலும் காணப்படலாம். எப்படியோ இன்று அல்லது நாளை புதிய ஜனாதிபதி யார் என்பது தெளிவாகிவிடும்.

புதிய ஜனாதிபதி யாராக இருந்தாலும் அவர் இந்தியாவுடன் எவ்வாறு இணைந்து செயற்படப் போகிறார் அல்லது இந்தியா அவருடன் எவ்வாறு இணைந்து செயற்பட போகிறது என்பது முக்கியமானதொரு கேள்வியாக இருக்கும்.

இந்த தேர்தலில் நாங்கள் யாரையும் ஆதரிக்கவில்லை. யாருக்கும் ஆதரவு தெரிவிக்கவும் இல்லை. இலங்கை மக்கள் யாரை ஜனாதிபதியாக தெரிவு செய்கிறார்களோ அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு இந்தியா எதிர்பார்த்திருக்கிறது என்று, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கூறியிருந்தார்.

அதே கருத்தையே, அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலும் பலருக்கு கூறியதாக தகவல். ஆனால் இந்த தேர்தலில் இந்தியாவுக்கு சில எதிர்பார்ப்புகள், நோக்கங்கள் இருந்தன. பயமும் இருந்தது. குறிப்பாக, அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெறுவதை இந்தியா சாதகமானதொரு விடயமாகப் பார்க்கவில்லை. இது வெளிப்படையான ஒன்று.



ஏனென்றால், அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலனுக்கும் பொருளாதார நலன்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இடையூறுகளை ஏற்படுத்தும் என்றும் கருத்து நிலவியது. அந்த சந்தேகங்கள் அல்லது பயத்தில் நியாயமும் உள்ளது.

உதாரணத்துக்கு, பிரசாரத்தின் இறுதிக்கட்டத்தில் அநுரகுமார திசாநாயக்க, தான் ஆட்சிக்கு வந்தால் அதானி குழுமத்தின் மன்னார் காற்றாலை மின் திட்டத்தை இரத்துச் செய்வேன் என்று அறிவித்திருந்தார். அவரது இந்த அறிவிப்பு இந்திய ஊடகங்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்ட ஒரு விடயம். அந்த முதலீடு கிட்டத்தட்ட 500 மில்லியன் டொலர்கள் பெறுமதியானது. இலங்கையை பொறுத்தவரையில் இது முக்கியமான ஒன்றும்

இந்தக் காற்றாலை மின் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், இலங்கையின் மின் உற்பத்தித் தேவையில் குறிப்பிடத்தக்க அளவை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும். அதேவேளை இலங்கைக்கான முதலீடாகவும் அமையும். ஆனால், இந்த மின் திட்ட ஒப்பந்தத்தில் மோசடி இருப்பதாகவும் ஊழல்கள் நிகழ்ந்திருப்பதாகவும் அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் தேசிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியிருந்தது. அதன் அடிப்படையில் தான் மன்னார் காற்றாலை மின் திட்டத்தை இரத்து செய்வேன் என்று அநுரகுமார திசாநாயக்க அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு இந்தியாவை நிச்சயம் பதற்றமடைய செய்திருக்கும்.



இந்த முதலீட்டுக்குப் பின்னால் இந்திய அரசாங்கம் இருந்தது, இந்தியாவின் முதலீடு ஒன்று கை நழுவுகின்ற போது அதனை இந்தியா சாதாரணமாக எடுத்துக் கொள்ளாது. 2019ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி திட்டத் திலிருந்து இந்தியாவை வெளியேற்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்த போது எத்தகைய சூழல் காணப்பட்டதோ அதேபோன்று ஒரு சூழல் உருவாக கூடும். மாலைதீவின் விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தில் இருந்து இந்தியா இப்படித்தான் வெளியேற்றப்பட்டது.

பங்களாதேஷில் இந்தியாவின் பல்வேறு திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்ய போவதான அறிவிப்பும் இதே போன்ற சிக்கலை இந்தியாவுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் மீளவும் ஒரு சிக்கலை இந்தியா எதிர்கொள்ளும் ஆபத்து இருக்கிறது, அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றால் இந்தியாவுக்கு இந்தச் சூழல் ஏற்படும். அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவோ சஜித் பிரேமதாசவோ வெற்றி பெறுகின்ற சந்தர்ப்பத்தில் இந்த நிலை ஏற்படாது.

அநுரகுமாரவின் வெற்றியினால், அதானி காற்றாலை மின் திட்டம் இரத்து செய்யப்படுகின்ற சூழல் ஏற்பட்டால், அது இந்திய-இலங்கை உறவுகளில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளையும் ஏற்படுத்தும், ஏனென்றால் அதானி குடும்பம் என்பது இந்திய அரசாங்கத்தின் ஒரு அங்கம் போன்றது.

குஜராத்தை தளமாகக் கொண்ட அதானி, அம்பானி குழுமங்களும், குடும்பங்களும், குஜராத்தை மையப்படுத்திய இன்றைய பா.ஜ.க. தலைவர்களான நரேந்திர மோடி, அமித்ஷா, போன்றவர்களுடன் மிக நெருக்கமானவை.


இந்த செல்வாக்கின் ஊடாகவே, அம்பானி, அதானி போன்றவர்களின் நிறுவனங்கள் சர்வதேச அளவில் இந்திய முதலீடுகளை செய்வதில் வெற்றி பெற்றிருக்கின்றன. எனவே அதானி குழுமத்தின் மீது அநுரகுமார திசாநாயக்க கை வைக்கின்ற நிலை ஏற்பட்டால், அது இந்திய அரசின் மீது கொடுக்கின்ற அழுத்தமாகவே இருக்கும். அத்தகைய நிலையில் அது இந்தியா இலங்கை இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு பாதிப்பை உண்டு பண்ணும்

2022 பொருளாதார அத்தகைய பாதிப்பானது. இந்தியாவுக்கு மாத்திரமானதாக இருக்காது. இலங்கைக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும். நெருக்கடியில், இலங்கையை உடனடியாக காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தது,

முடக்க நிலையில் இருந்து செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வந்தது, இந்தியாவின் சுமார் 4 பில்லியன் டொலர்கள் உதவி தான். இத்தகைய நிலையில் இந்தியாவுக்கு சவால் விடும் வகையில் நடந்து கொண்டால், இந்தியா தனது செல்வாக்கை நிலை நிறுத்துவதற்கு வேறு பல வழிகளைக் கையாள முற்படும். இந்திய - பங்களாதேஷிலிருந்து பிரதமர் ஷேக் ஹசீனா வெளியேற்றப்பட்ட பின்னர், அங்கு எதிர்ப்பு அரசியல் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது. இதனை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. ஷேக் ஹசீனா இந்தியாவின் ஆதரவாளர் என்பது மாத்திரமல்ல, அவரை வைத்து இந்தியா அங்குள்ள அரசியலிலும் தலையீடு செய்ய முனைவதை அவதானிக்க முடிகிறது.

ஷேக் ஹசீனாவை இப்போது இந்திய புலனாய்வு அமைப்பான 'றோ' தான் கையாளுகிறது. 'றோ'வின் கட்டுப்பாட்டில், அதன் பாதுகாப்பிலேயே அவர் தங்க வைக்கப்பட்டிருக்கிறார். இதனை இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பகிரங்கமாக உறுதி செய்திருக்கிறார். அவர் இதனை வெளிப்படுத்தியதற்கு காரணம், இந்தியத் திட்டங்களுக்கு ஏற்படும் ஆபத்துகளுக்கு இராஜதந்திரத்துக்கு அப்பால் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற எச்சரிக்கை தான்.

இந்திய அரசாங்கம் நகர்வுகளை முன்னெடுப்பது இராஜதந்திர ரீதியானதாக


**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



இருக்கும். ஆனால் 'றோ' அவ்வாறு செயற்படும் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதற்கு அப்பாலும் செயலாற்றும். இலங்கையில் 'றோ' வின் செயற்பாடுகள் எவ்வாறானதாக இருந்தது என்பதை கூறித் தெரிய வேண்டியதில்லை.

அது ஜே.ஆரின் அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட்டது, அதே சந்தர்ப்பத்தில் தமிழ் போராளி இயக்கங்களுக்கும் ஆயுதங்களை கொடுத்து பயிற்சிகளையும் வழங்கியது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தங்களின் இலக்கை வெற்றி கொள்வதற்காக 'றோ' அந்த இரு முனை தந்திரோபாயத்தை கையாண்டது. அந்த தந்திரோபாயத்தில் 'றோ' வெற்றி பெற்றதா இல்லையா என்பது வேறு கதை.

ஆனால் அப்படி வேறுபட்ட தந்திரங்களை கையாளுகின்ற அமைப்பு தான் 'றோ' என்பதே முக்கியமானது. இப்பொழுது ஷேக் ஹசீனாவை அந்த அமைப்பு கையாளுகிறது அதுதான் முக்கியமானது.

இந்தநிலை எதிர்காலத்தில் இலங்கைக்கு ஏற்படாது என்று உறுதியாக கூற முடியாது. அநுரகுமார திசாநாயக்கவோ அல்லது இந்தியாவுக்கு எதிரான நகர்வுகளை முன்னெடுக்கின்ற ஒரு ஆட்சியாளரோ, ஜனாதிபதியாக வருவாரேயானால் அவர் அதிகாரத்தை செலுத்துவதற்கு கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கூடும்.

அது கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உருவாகிய பொருளாதார நெருக்கடிகள் போன்ற சூழலை உருவாக்கினாலும் ஆச்சரியம் இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ இடை நடுவில் நாட்டை விட்டு ஓடியது போன்ற நிலை கூட ஏற்படலாம்.

ஏனென்றால் இலங்கையில் ஆட்சி இருக்க செலுத்துபவர்கள் இந்தியா போன்ற நாடுகளுடன் இணைந்து செயற்படுவார்களாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அந்த நாடுகளிடம் காணப்படுகிறது. அந்த எதிர்பார்ப்பை மீறுகின்ற போது, குழப்பங்கள் தானாக உருவாகாது. வலிந்து உருவாக்கப்படும்.


**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து மதத்தைச் சேர்ந்த குல மகளுக்கு பெற்றோர்கள் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம்.

Born in 1989 & Non Vegetarian

Doctor of Medicine (MD) – Doing Residency in USA

Proposal from Canada, USA - (From UK, Australia, Sri Lanka & other Countries who is willing to relocate to USA also will be considered)

தொடர்புகளுக்கு: 416 282 1619 அல்லது
416 953 8297(Mobile/WhatsApp/Viber)
Email. Kandiah4u@hotmail.com

# சஜித் பிரேமதாசாவின் தோல்விக்கு என்ன காரணம்? அவரது பின்னணி என்ன?



தந்தையின் படுகொலைக்குப் பிறகு அரசியலில் நுழைந்த சஜித் பிரேமதாஸ, இலங்கை அரசியலின் ஏற்ற இறக்கங்களில் 30 ஆண்டுகளாகப் பயணம் செய்தவர். இலங்கை ஜனாதிபதி தேர்தலில் முக்கியப் போட்டியாளர்களில் ஒருவராக இருந்த சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் எனப் பல பதவிகளை வகித்தவர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் தோல்வியடைந்த சஜித், இந்த முறை கூடுதல் நம்பிக்கையுடன் களம் இறங்கி இருந்தாலும், அவரால் வெற்றி பெற முடியவில்லை.

## சஜித்தின் தோல்விக்கு காரணம் என்ன?

திஸாநாயக்க ஜேவிபிக்கு கிடைத்த வெற்றியாகப் பார்க்கக் கூடாது. இலங்கையின் பாரம்பரிய, பழைய அரசியல் கட்சிகள் மீது, பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மக்களிடையே ஒரு வெறுப்பு இருக்கிறது. அப்படியிருக்கும் சூழலில், அநுர குமார ஒரு நல்ல தேர்வாகத் தெரிகிறது. ஆகையால் அவருக்கு வாக்களிக்கிறார்கள்.

அதேநேரம், சஜித்தை பொறுத்தவரை, அவர் ஐக்கிய தேசிய கட்சியை விட்டு வெளியே வந்து, ஒரு புதிய கட்சியை உருவாக்கியிருந்தாலும், பழைய ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியே வந்தவர்கள் தான் இந்தப் புதிய கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலும் இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இந்தக் கட்சியும் ஒரு பழைய அரசியல் சக்தியாகவே மக்கள் மத்தியில் பார்க்கப்படுகிறது. ஆகையால் மக்கள் அவரைப் பெரியளவில் தேர்வு செய்யவில்லை என்கிறார் வீரகத்தி தனபாலசிங்கம்.

## யார் இந்த சஜித்?

பிற்காலத்தில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இரண்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணசிங்க பிரேமதாஸ, ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவும் அரசின் தலைமைக் கொறடாவாகவும் இருந்த காலத்தில், அவருக்கும் ஹேமா விக்ரமதுங்கேவுக்கும் 1967 செப்டம்பர் 12ஆம் தேதி பிறந்தார் சஜித் பிரேமதாஸ.

செயின்ட் தாமஸ் பிரிபரேட்டரி பள்ளி, கொழும்புவில் உள்ள ராயல் கல்லூரி, லண்டனில் உள்ள மில் ஹில் ஸ்கூல் ஆகியவற்றில் படித்தார் சஜித். இவருக்குப் பத்து வயதாக இருக்கும் போதே, இவருடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸ, இலங்கையின் பிரதமராகி விட்டார். இருந்தாலும் சஜித்தின் படிப்பு தொடர்ந்தது. லண்டன் பொருளாதாரப் பள்ளியிலும் லண்டன் பல்கலைக் கழகத்திலும் படித்த சஜித், மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தில் பொது மேலாண்மையில் முதுகலை படிப்பில் சேர்ந்தார்.

இதற்கிடையில் ரணசிங்க பிரேமதாஸ இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அடுத்த சில ஆண்டுகளிலேயே, 1993 இல் ஒரு தற்கொலைப் படை தாக்குதலில் கொல்லப்பட்டார் பிரேமதாஸ. இதையடுத்து அமெரிக்காவில் இருந்து சஜித் நாடு திரும்பினார்.

தந்தையைப் போலவே அரசியலில் ஈடுபட விரும்பிய சஜித், 1994இல் தனது தந்தை இருந்த கட்சியான ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்தார். அவருக்கு அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாவட்ட அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டது. சிறிய பொறுப்பு தான் என்றாலும் சின்னச் சின்ன நிகழ்சிகளை நடத்தி விறுவிறுப்புடன் செயல்பட்டார் சஜித். அந்த மாவட்டத்தில் தருண சவிய என்ற இளைஞர் இயக்கத்தையும் வறுமை ஒழிப்பிற்காக சன சுவய போன்ற அமைப்புகளையும் கட்டியெழுப்பினார்.

கடந்த 2000வது ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் வாய்ப்பு சஜித்திற்கு அளிக்கப்பட்டது. அதில் பெரும் வெற்றி பெற்றார் சஜித். அதற்குப் பிறகு, 2001, 2004, 2010, 2015 ஆகிய தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். கடந்த 2001இல் ரணில் விக்ரமசிங்க பிரதமரான போது, அவரது அமைச்சரவையில் சுகாதாரத் துறை துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2011இல் ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவராகவும் தேர்வானார் சஜித்.

கடந்த 2015இல் மைத்திரி பால சிறிசேன புதிய ஜனாதிபதியாகத் தேர்வானதும், சஜித் வீட்டு வசதி மற்றும் சமிர்தி திட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் கீழ் மத்தியதர மக்களுக்காகப் பல வீட்டு வசதித் திட்டங்களை முன்னெடுத்தார் சஜித்.

கடந்த 2010, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி நேரடியாகப் போட்டியிடவில்லை. மாறாக பொது வேட்பாளர்களை ஆதரித்தது. 2015இல் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஆனால், விரைவிலேயே ரணிலுக்கும் சிறிசேனவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இது 2018இல் ஒரு மிகப் பெரிய அரசியல் சாஸன சிக்கலுக்கு இட்டுச் சென்றது. அந்தப் பிரச்சனை பிறகு தீர்க்கப்பட்டாலும், 2015இல் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தது தவறு எனக் கருதியது ஐக்கிய தேசியக் கட்சி. இதனால், 2019இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்பினார். ஆனால், மங்கள சமரவீர, ஹரின் ஃபெர்னாண்டோ போன்றவர்கள் சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட வேண்டும் எனக் கூறினர். சில நாட்கள் இழுபறிக்குப் பிறகு, சஜித்தை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக ஏற்க ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டார். அந்தத் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டு 41 சதவீத வாக்குகளைப் பெற்றார் சஜித்.

விரைவிலேயே எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டார் சஜித். இந்நிலையில் அவரை பிரதமர் பதவிக்கான போட்டியில் நிறுத்த விரும்பியது ஐக்கிய தேசியக் கட்சி. 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட சமாகி ஜன பலவெகய என்ற முன்னணியை உருவாக்கினார் சஜித். இந்த முன்னணிக்கு அன்னப் பறவையின் சின்னம் ஒதுக்கப்பட்டது. இதில் போட்டியிட ரணில் ஒப்புக்கொண்டார். ஆனால், இறுதி நேரத்தில் சஜித் ஆதரவாளர்கள், வேறு சின்னத்தில் போட்டியிட்டனர். இதனால், கட்சி பிளவடைந்தது.

அந்தத் தேர்தலில் 54 இடங்களைப் பிடித்த சமாகி ஜன பலவெகயவின் சார்பில் சஜித் எதிர்க்கட்சித் தலைவரானார். 2020 ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த முன்னணியின் சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட களத்தில் இறங்கினார் சஜித்.

தந்தையின் நிழலில் அரசியலுக்கு வந்தவர் சஜித். அவருடைய பேச்சுகள், பேட்டிகள் ஆகியவை அவர் அந்த நிழலை விட்டு வெளியேறவில்லையோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. 2022 நெருக்கடியின் போது ஜனாதிபதி பதவியை ஏற்க மறுத்தார். பதவியை ஏற்றுக்கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் காட்டியிருக்க வேண்டும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை' என்கிறார் பிபிசி சிங்களப் பிரிவின் ஆசிரியரான இஷாரா தனசேகர.


இருந்த போதும், எதிர்க்கட்சித் தலைவராக அவருடைய செயல்பாடுகள் கவனிக்கத் தக்கவையாகவே இருந்தன. பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை, அவர் உலக மயமாக்கலுடன், உள்ளூர் மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களிலும் கவனம் செலுத்த விரும்புகிறார்.

'பொருளாதாரத்தைச் சீர்திருத்தி, அதைப் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்டதாகவும் மாற்ற வேண்டும். இது மக்களிடையே செல்வத்தை உருவாக்கும். பாதிக்கப்படக்கூடிய நபர்களைப் பாதுகாப்பதற்காக இலக்கு வைக்கப்பட்ட மானியங்களுடன் கூடிய வலுவான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு மூலம் பொருளாதார நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும்' என அவருடைய தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழர் விவகாரங்களில் நிலைப்பாடு என்ன? தமிழர் பிரச்சனைக்கான தீர்வைப் பொறுத்தவரை, 13வது சட்டத் (13ம் பக்கம் பார்க்க)



Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 416 477 6854 | +1 647 700 7208
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120777** (F)
30yrs, 5'2" , Single , Swaathi , 9 Sevai , Diploma , Lab Tech , Canada

**ID08120684** (F)
27yrs, 5'4" , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Health , Canada

**ID08120662** (F)
32yrs, 5'2" , Single , Pooraadam , 11 Sevai Bachelors.. , Product Management , Canada

**ID08120644** (F)
29yrs, 5'7" , Single , Visaakam , 12 Sevai , Bachelors.. , Business Analyst.. , Canada

**ID08120640** (F)
29yrs, 5'4" , Single , Kettai , 2 Sevai , Postgraduate.. , Social Media.. , Canada

**ID08120637** (F)
31yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Analyst , Canada

**ID08120633** (F)
38yrs, 5'2" , Single , Avittam , 2 Sevai , High School , District manager , Canada

**ID08120036** (F)
32yrs, 5'2" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Masters Degree , Academic Advisor , Canada

**ID08119986** (F)
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08119978** (F)
28yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , Bachelors.. , Manager Hospitality.. , Canada

**ID08119833** (F)
32yrs, 5'4" , Single , Aayilyam , 5 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08120630** (F)
31yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08119986** (F)
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08120771** (F)
29yrs, 5'5" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , Software engineer , Sri Lanka

**ID08120696** (F)
30yrs, 5'1" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degree , Clinical Research.. , Canada

**ID08120686** (F)
32yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120681** (F)
28yrs, 5'3" , Single , Mrigasheersham , 2 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120676** (F)
26yrs, 5'3" , Single , Chithirai , 4 Sevai , Bachelors.. , Program Coordinator , Canada

**ID08120581** (F)
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120809** (F)
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120808** (F)
31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Acadamic Staff , Sri Lanka

**ID08120807** (F)
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120806** (F)
27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120805** (F)
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120804** (F)
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120803** (F)
21yrs, 4'10" , Single , Not Specified , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120802** (F)
19yrs, 5'4" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors.. , MSc intended.. , Canada

**ID08120799** (F)
45yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795** (F)
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

**ID08120794** (F)
24yrs, 5'4" , Single , Poosam , N/A Sevai , Bachelors.. , Dental Assistant , Canada

## மணமகன்



**ID08120717** (M)
33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08120715** (M)
27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709** (M)
38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120673** (M)
35yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642** (M)
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120642** (M)
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616** (M)
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613** (M)
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120335** (M)
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08117127** (M)
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686** (M)
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120801** (M)
69yrs, 5'10" , Divorced , Visaakam , N/A Sevai , Diploma , Security Officer , Canada

**ID08120751** (M)
33yrs, 5'7" , Single , Thiruvonam , 11 Sevai , Bachelors.. , General practitioner , United Kingdom

**ID08120694** (M)
39yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120690** (M)
40yrs, 5'6" , Single , Swaathi , N/A Sevai , High School , Building Construction , Sri Lanka

**ID08120670** (M)
30yrs, 5'11" , Single , Poosam , 12 Sevai , Diploma , Team leader , Canada

**ID08120639** (M)
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120474** (M)
28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120797** (M)
32yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , IT Consultant , Sri Lanka

**ID08120796** (M)
30yrs, 5'7" , Divorced , Thiruvonam , 8 Sevai , High School , Truck Driver , Canada

**ID08120793** (M)
25yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

**ID08120790** (M)
21yrs, 4' , Single , Not Specified , N/A Sevai , High School , Casc , Anguilla

**ID08120789** (M)
35yrs, 6'1" , Single , Rohini , N/A Sevai , High School , Tba , Canada

**ID08120788** (M)
22yrs, 5'4" , Single , Rohini , N/A Sevai , High School , Phone shop , Sri Lanka

**ID08120787** (M)
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical rep , Sri Lanka

**ID08120786** (M)
36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120785** (M)
52yrs, 5'9" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Optician , Sri Lanka

**ID08120782** (M)
30yrs, 6'2" , Single , Rohini , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Sri Lanka

**ID08120779** (M)
35yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Company Forklift.. , Canada

**ID08120773** (M)
46yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Elecerician.. , Sri Lanka

# பொதுவேட்பாளரை நிறுத்தியதன் மூலம் “தமிழ்த்தேசியம்” அம்மணமாக சர்வதேசத்தின் முன்னால் நிற்கின்றது!

அன்றொரு நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் கூறிய அ,ஆ,இ.... அரிவரி அரசியல் வரிகள் இவை. அந்த வரிசையில் வந்தது தான் இந்த பொதுவேட்பாளர் எண்ணக்கருவும், தமிழர் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு காட்டுகின்றதுமான இந்த இ: அரசியலும்.

இப்போது தமிழ் மக்கள் தங்கள் அபிலாஷை என்ன? என்பதை தேர்தல் முடிவுகள் மூலம் தெட்டத் தெளிவாக சர்வதேசத்திற்கு காட்டியுள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒட்டுமொத்த தமிழர் பெரும்பான்மை தமிழ்த்தேசிய தீவிர அரசியலை நிராகரித்திருக்கிறது. சிங்கள தேசிய சக்திகளுடன் இணக்க அரசியல் செய்வதற்கான விருப்பத்தை வெளிக்காட்டியிருக்கிறது. அரசியல் ஆய்வுகள் பலவும் ஆரம்பத்தில் இருந்தே குறிப்பிட்டது போல் தமிழ்த்தேசியம் அம்மணமாக சர்வதேசத்தின் முன்னால் நிற்கிறது. இதை விடவும் பொது வேட்பாளர் கச்சையை உரிந்து சர்வதேசத்திற்கு காட்டுவதற்கு இன்னும் என்ன இருக்கிறது.

அதே போன்றே தேர்தல் பகிஷ்கரிப்பு கோரிக்கையை முன் வைத்த தமிழ்க் காங்கிரசும் அம்பலப்பட்டு நிற்கிறது. தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் அணி தமிழரசுக்கட்சியின் சாணக்கியன் அணி சஜீத் பிரேமதாசவையும், ரி.எம்.வி.பி. ரணில் விக்கிரமசிங்கவையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆதரித்திருந்தன.



இது பாராளுமன்றத் தேர்தல் அல்ல வாக்குகள் பல்வேறு தமிழ் கட்சிகள், வேட்பாளர்களுக்கு இடையே பிரிந்து போவதற்கு. தமிழ்த்தேசிய பொதுக் கூட்டமைப்பினர் வார்த்தைகளில் சொன்னால் பொதுவேட்பாளர் ஒட்டு மொத்த தமிழினத்தின் அடையாளம்.

இப்போது தமிழ்த்தேசிய சஜீத் ஆதரவு அணி தோற்றது. தமிழ்த்தேசிய ரணில் ஆதரவு அணி தோற்றது. தமிழ்த் தேசிய பகிஷ்கரிப்பு அணி தோற்றது. வடக்கு கிழக்கு சஜீத், ரணில் ஆதரவு முஸ்லீம் கட்சிகளும், அணிகளும் தோற்றன. ரணில் ஆதரவு இணக்க அரசியல் ஈ.பி.டி.பியும், ரி.எம்.வி.பி.யும் தோற்றுப் போயினர். சஜீத்தையும், ரணிலையும் ஒன்றிணைக்க முனைந்த தென்னிலங்கை அரசியல் தலைமையின் டெலிபோன் ஒலி வடக்கு கிழக்கு மக்களின் காதுகளில் சங்கு ஒலியை விடவும் ஓங்கி ஒலித்திருக்கிறது.

ஜே.வி.பி. அ -னாவில் இல்லாமல் ஆ -வன்னாவில் ஆரம்பித்து இ- னாவுக் கூடாக அ -வை எட்டியிருக்கிறது. கிழக்கில் இருந்து களமிறக்கப்பட்ட பொதுவேட்பாளர் அரியநேந்திரன் மூன்று மாவட்டங்களிலும் மட்டக் களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் அனைத்திலும் அநுர குமாரவினால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் உட்பட எந்த ஒரு தேர்தல் மாவட்டத்திலும் அரியநேந்திரனுக்கு அதிகூடிய வாக்குகளைப் பெறமுடியவில்லை.

அதிலும் வெட்கக்கேடு தனது சொந்த மாவட்டமான மட்டக்களப்பில் அனுர குமார திசாநாயக்கா இரண்டாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை மேலதிகமாக பெற்று அரியநேந்திரனை தோற்கடித்திருப்பது. பொதுவேட்பாளர் அரியநேந்திரன் பெற்ற வாக்குகள் 36,905, தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார பெற்ற வாக்குகள் 38,832.

தமிழர் அடையாள அரசியலில் எந்தத் தும்புக் கட்டையை வேட்பாளராக நிறுத்தினாலும் வெற்றி பெறுவோம் என்ற தமிழ்த்தேசிய அரசியலை அதே தும்புக்கட்டைக் கொண்டு மக்கள் துடைத்து துப்பரவு செய்திருக்கிறார்கள்.

மேலும் பொதுவேட்பாளர் அரியநேந்திரனின் சொந்த தொகுதி மட்டும் அன்றி, தனித்தமிழ் தொகுதி என்ற பெயரைக் கொண்ட பட்டிருப்பில் பொது வேட்பாளர் ஆக 12,356 வாக்குகளை (13%) மாத்திரமே பெற்றுள்ளார். மாறாக சஜீத் பிரேமதாச (40%) ரணில் விக்கிரமசிங்க (29%), அநுரகுமார திசாநாயக்க (07%) வாக்குகளை பெற்றுள்ளனர். இதன்படி அரியநேத்திரன் சொந்த தொகுதியிலும் சிங்கள தேசியத்தினால் (76%) தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

அரியநேத்திரன் வாயில் அவர் தமிழ் தேசியத்தின் குறியீடு அது உண்மையெனில் வடக்கு, கிழக்கில் இந்த வாக்களிப்பு எப்படி அமைந்திருக்க வேண்டும்?. தமிழ் வாக்காளர்கள் பெரும்பான்மையாக உள்ள யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரியநேத்திரன் சிங்கள தேசிய வேட்பாளர்களை தோற்கடித்து முன்னணியில் நின்றிருக்க வேண்டும் அல்லவா?

அம்பாறையிலும், திருகோணமலையிலும் ஆகக் குறைந்த பட்சம் மொத்த தமிழர் வாக்குகளில் அதிகமானவற்றை பெற்றிருக்க வேண்டாமா? தமிழ்த் தேசியப் போர் தொடுக்க சங்கை எடுத்து சங்கை கெட்டு நிற்கிறது தமிழ்த்தேசிய பொதுக்கூட்டமைப்பு. கடிதத் தலைப்பு 83 அமைப்புக்களும், 7 கட்சிகளும். சங்கே முழங்கு என்று மூச்சடக்கி சங்கூதிய தமிழ்த்தேசியத்தின் ‘திரட்சி’ ஊடகவியலாளர்களுக்கு மூச்சு திணறலை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் மக்கள் காத்திருந்து தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினர் கட்சிகளான தமிழ்த்தேசிய கட்சிகளும், முஸ்லீம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் கட்சிகளும் பிளவின்றி ஒரே அணியாக தென்னிலங்கையின் மூன்று வேட்பாளர்களுள் ஒருவரை ஆதரிக்க தீர்மானித்தில் இருந்தால் அவர்கள் மேடைக்கு மேடை கூவிய தாங்கள் தான் ஜனாதிபதியை தீர்மானிக்கும் சக்தி என்பதை நனவாக்கி இருக்க முடியும். அநுரகுமார திசாநாயக்கவின் வாய்ப்பை தட்டிப் பறித்திருக்கவும் முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் முஸ்லீம் வாக்குகள் சஜீத், ரணில், அரியம் என்று பிரிந்ததால் அதன் இறுதி நன்மையை அடைந்தவராகி றார் அநுரகுமார. இல்லையேல் குறைந்தது பத்து இலட்சம் வாக்குகளால் சஜீத் அல்லது ரணிலை ஜனாதிபதியாக்கியிருக்க முடியும். அப்போது அவர்கள் கூறிய ஜனாதிபதி யார்? என்பதை நிர்ணயித்தல் சாத்தியமாகியிருக்க வாய்ப்பு இருந்தது.

களும் தோற்றுப் போயினர். பொது வேட்பாளரை நிறுத்த முயன்ற தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸும் தோற்றன. சுமந்திரன் அணியை தன் பக்கம் இழுப்பதில் தமிழ்த்தேசிய பொதுக்கூட்டமைப்பும் தோற்றது.

சஜீத் தோற்றார். ரணில் தோற்றார். அரியநேந்திரனும் தோற்றார்.

சிறுபான்மையினர் கட்சிகள் அனைத்தும் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று சிபார்சுகளை செய்தவை. அந்த சிபார்சு அரசியலை மக்கள் ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும், ஆனால் அது மக்களுக்கு நன்மையற்ற வகையில் தோற்றுப் போயிருக்கிறது. ஆக, வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்கள் பொதுவாகவும், சிறப்பாக பொது வேட்பாளருக்கு அளித்த வாக்குகளும் ஜனநாயக அரசியலில் ஆயுதமாகவோ, இராஜ தந்திரமாகவோ அன்றியும் அகிம்சை அரசியலுக்கும் பயனற்று குப்பை கூடைக்குள் வீசப்பட்டுள்ளன.

கடந்த பாராளுமன்ற தேர்தல் வாக்களிப்புடன் ஒப்பிடுவதன் மூலம் வடக்கு கிழக்கில் தமிழ்ப்பொதுவேட்பாளருக்கு ஏற்பட்டுள்ள படுதோல்வியை கோடிட்டுக் காட்டமுடியும். கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி பெற்ற வாக்குகளை விடவும் ஆக சுமார் மூவாயிரம் வாக்குகளை பொதுவேட்பாளர் மேலதிகமாக பெற்றுள்ளார். இது பகிஷ்கரிப்பு கோரிக்கையை நிராகரித்தவர்களின் வாக்காக இருக்க வாய்ப்புண்டு.

வடக்கு, கிழக்கின் மற்றைய மாவட்டங்கள் அனைத்திலும் பொதுவேட்பாளர் 2020 பாராளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி பெற்ற வாக்குகளை விடவும் குறைவாகவே பெற்றுள்ளார். குறைவு என்பது ஒருசில ஆயிரம் வாக்குகள் அல்ல. வன்னி, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் பொது வேட்பாளர் சுமார் 50 வீதம் வாக்குகளை குறைவாகப் பெற்றுள்ளார். அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வீழ்ச்சி சுமார் 75 வீதமாக இருக்கிறது.

இதனால்தான் அநுரகுமார அரியத்தாரை மட்டக்களப்பு மாவட்டத்தில் முந்தக்கூடியதாக இருந்தது. இது முயலும், ஆமையும் நடாத்திய ஓட்டப்பந்தயத்தை நினைவுட்டும் பொதுவேட்பாளர் அரசியல் கோமாளித்தனம்.

ஆக, பொதுவேட்பாளர் கோமாளி வேடம் போட்டு தமிழ்த்தேசியம் சர்வதேசத்திற்கு மக்கள் வாக்கெடுப்பின் மூலம் காட்டியிருப்பது என்ன?

வட்டுக்கோட்டை பிரகடனத்தை மக்கள் நிராகரித்து இருக்கிறார்கள். அல்லது காலத்திற்கு பொருத்தமற்ற காலாவதியான ஒன்று என்று மீளப் பெற்றிருக்கிறார்கள்.

இதன்மூலம் தமிழர் தாயகக்கோட்பாடு, தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி, இணைந்த வடக்கு கிழக்கு அனைத்தும் மக்கள் மத்தியில் பலவீனமான கருத்தாடல்களாகி விட்டன என்பது சர்வதேசத்திற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஒற்றையாட்சிக்குள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் என்பதற்கும் அப்பால் இலங்கையர்கள் என்ற அடையாளத்துடன் இணக்கமாக வாழ விரும்புகின்றனர்.

ஒரு நாடு, ஒரே மக்கள் இலங்கையில் எவரும் எங்கும் வாழலாம் எந்தப் பிரிவினருக்கும் என்று தனியான பிரதேசங்கள் இல்லை என்ற கோத்தபாயவின் நிலைப்பாட்டிற்கு ஜே.வி.பி. வடிவம் கொடுக்க வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் அநுரகுமாரவுக்கு வாக்களித்து உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் தமிழ்த்தேசிய மக்கள் திரட்சி, தாராள பொருளாதாரக் கொள்கை, பொருளாதார அபிவிருத்தி வேண்டி நின்ற தொடர்ச்சி, இந்திய, அமெரிக்க மேலாண்மை போன்ற வற்றையும் நிராகரித்து இருக்கிறார்கள் தமிழ் மக்கள் .

சுமந்திரன் அணி தமிழ்த்தேசியத்தை சிதைக்கிறது என்று தும்புக்கட்டுக்கு குஞ்சம் கட்டப்போய் தமிழ்த்தேசிய பொதுக்கூட்டமைப்பும், பொதுவேட்பாளரும் மூக்குடைபட்டு நிற்கிறார்கள்.

இனி என்ன?. வீழ்ந்தாலும் மீசையில் மண்ஒட்டாத அறிக்கைகள் நாளை வரும்!

- அழகு. குணசீலன்



# ஆரோடு நோவேன்? ஆர்க்கெடுத்துரைப்பேன்?





ஈழப் போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்து விட்டது. இந்தப் போரில் பங்கெடுத்த முன்னாள் போராளிகள் இப்போது எப்படியிருக்கிறார்கள்? குறிப்பாக, தங்கள் இளமையையும் வாழ்க்கையை யும் சமூகத்துக்காக, இனத்துக்காக, மண்ணுக்காக தியா–கம் செய்த பெண் புலிகளின் வாழ்க்கை எப்படியிருக்கிறது? ‘விடுதலைப் புலிகள்’ நடத்திய ‘வெளிச்சம்’ பத்திரிகையின் ஆசிரியரும் ஈழக் கவிஞருமான கருணாகரன் எழுதுகிறார்.

கடந்த வாரம் ஏழு பெண்களைச் சந்தித்தேன். எல்லோருக்கும் வயது நாற்பதுக்கு மேல். சிலர் ஐம்பதைத் தொடும் நிலையிலிருக்கிறார்கள். அருவி (வயது 46), வெற்றிமலர் (வயது 48), நிலா (வயது 46), அறிவுமங்கை (வயது 45), நிலவழகி (வயது 48), மலரினி (வயது 49), செந்நிலா (வயது 50). எல்லாமே எதிர்பாராத சந்திப்புகள். ஏழு பேருக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை.

இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக இவர்களோடு பழகி வந்திருக்கிறேன். சிலரோடு சில சந்தர்ப்பங்களில் சேர்ந்து வேலையும் செய்திருக்கிறேன். என்ன துணிச்சல்! எவ்வளவு ஆற்றல்! எப்படியான திறமை! நாம் எதிர்பார்த்தேயிராத வகையில் எந்த வேலையையும் வலு சிம்பிளாகச் செய்து முடித்து விடுவார்கள். எதிர்பாராத கோணங்களில் அசாத்தியமான முடிவுகளை எடுப்பார்கள். அத்தனை சிந்தனைத் திறன், அவ்வளவு விவேகம்.

அருவி– பின்தங்கிய ஒரு கடலோரக் கிராமத்தில் பத்துப் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். அவளுக்கு ஒரு கை இல்லை. அந்தப் பிள்ளைகள் கொடுக்கும் சிறிய தொகைப் பணமே அவளுடைய தேவைகளுக்கானது.

வெற்றிமலர்– இவளும் ஒரு கடலோரக் கிராமத்தில் தானிருக்கிறாள். வீட்டுக்குத் திரும்பிய பிறகு தையல் பழகி, அதன் மூலம் சீவியத்தை ஓட்டு கிறாள்.

நிலா– சில காலம் பழகிய தொழிலான வீடியோ எடிற்றிங்கைப் பல கடைகளில் செய்தாள். எல்லோரும் மிகக் குறைந்த ஊதியத்தையே கொடுத்தார்கள். ஒரு காலம் நிறைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் குறும்படங்களையும் உருவாக்கியவள். அவளுடைய திறமைகளைப் புரிந்து கொள்ளவோ கொண்டாடவோ யாருமே இல்லை. பேசாமல் தோட்டத்தில் புல்லுப்பிடுங்கவும் வெங்காயம் நடவும் போகிறாள். வயிறொன்று இருக்கிறதல்லவா. அதை விட ஒவ்வொரு நாளையும் எப்படியோ போக்கிக் கொள்ள வேண்டுமே!

அறிவுமங்கை,– இதழியல், அச்சு, வடிவமைப்பு போன்றவற்றில் அனுபவம் கொண்டவள். இந்தத் துறையில் எங்காவது வேலை செய்யலாம் என்று செய்து பார்த்தாள். அடிமாட்டுச் சம்பளம் கொடுக்கிறார்கள். கடையொன்றில் வேலை செய்தாள். அங்கும் கெடுபிடிகள் அதிகம். ஒன்றுமே சரிப்பட்டு வரவில்லை. எல்லோரும் அவளைப் பயன்படுத்தும் அளவுக்கு அவளுடைய திறன்களுக்கான மதிப்பையும் ஊதியத்தையும் கொடுக்கத் தயாரில்லை. தனியாக ஒரு இடத்தில் அச்சு வடிவமைப்பைச் செய்யலாம் என்று முயற்சித்துக் கொண்டிருக்கிறாள்.

நிலவழகி,– எதையும் கூருணர்வோடு அணுகும் திறனுள்ளவள். இடுப்புக்குக் கீழே இயங்க முடியாதிருக்கிறார். அதனால் எங்குமே செல்வதில்லை. ஒரு சிறிய வீட்டின் ஒதுக்குப் புறத்தில் உள்ள அறையே அவளுடைய பேருலகம். அமைதியான சுபாவம். சிரிப்பினால் எல்லாவற்றையும் சமன் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறாள். நெருங்கிய உறவுகள் என்று எதுவுமில்லை. தெரிந்தவர்களின் அனுசரணையில் வாழ்க்கை ஓடுகிறது. ஆனால், இதுவும் எவ்வளவு காலத்துக்கு இப்படியிருக்கும் என்று தெரியவில்லை என்கிறார்.

அதனால், இடுப்புக்குக் கீழே இயங்க முடியாத போராளிகளுக்காக இயங்கும் விடுதி ஒன்றில் (இது புலம்பெயர்ந்தோரினால் நடத்தப்படுவது) இடம் கேட்டு விண்ணப்பித்திருக்கிறாள். கிடைத்தால் போய் விடுவேன் என்றாள். அவளுக்கென்றொரு காணி வன்னியில் உண்டு. ஆனால், அதில் ஒரு வீட்டைப் போட்டுக் கொண்டு இருப்பதற்கு இன்னும் முடியவில்லை. அவளும் எத்தனையோ வழிகளால் முயற்சித்து விட்டாள். ஆனாலும் எதுவுமே கை கூடவில்லை.

மலரினி,– காலில் பெரிய காயம். சீராக நடக்க மாட்டாள். அதைவிட வயற்றிலும் பெருங்காயங்களின் தளும்பும் உள் வலியும் (22ம் பக்கம் பார்க்க)



# விலங்குக் கொழுப்புக் கலந்த நெய்யில் திருப்பதி லட்டு

திருப்பதி லட்டு பிரசாதம் உலக பிரசித்தி பெற்றதாகும். ஆனால், இந்த லட்டு பிரசாதத்தில் ஜெகன்மோகன் ரெட்டியின் ஆட்சி காலத்தில், விலங்குகளின் கொழுப்பு கலந்த நெய்யை உபயோகித்ததாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு வந்ததும், திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரியாக சியாமள ராவ் நியமனம் செய்யப்பட்டார். ஐஏஎஸ் அதிகாரியான இவர், பதவி பொறுப்பேற்றதும், திருமலையில் பல இடங்களில் ஆய்வு மேற்கொண்டு, லட்டு பிரசாதத்தின் தரத்தையும் ஆய்வு செய்தார். அப்போது நெய்யில் கலப்படம் இருப்பதை அறிந்த அவர், அதனை பரிசோதிக்க லேப்புக்கு அனுப்பி வைத்தார். அப்போது நெய்யில் கலப்படம் இருந்ததை அவர் ஊர்ஜிதப்படுத்தினார்.

8.50 லட்சம் கிலோ வீதம் 5 நிறுவனங்களுக்கு டெண்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு நிறுவனம் தேவஸ்தானத்திற்கு அனுப்பிய 68 ஆயிரம் கிலோ நெய்யில், 20 ஆயிரம் கிலோ நெய் கலப்படம் செய்யப்பட்ட நெய் என தெரிய வந்ததால் அவற்றை திருப்பி அனுப்பி விட்டோம் எனவும், அந்த நிறுவனத்தை பிளாக்லிஸ்ட்டில் வைத்ததோடு, கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் சியாமள ராவ் தெரிவித்தார். இதனை தொடர்ந்து, திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டு பிரசாதம் தயாரிக்க தற்போது கர்நாடக மாநிலத்தில் இருந்து நந்தினி நெய் வரவழைக்கப்பட்டு அதன் மூலம் தயாரிக்கப்படுகிறது. இது குறித்து முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியதாவது:

ஜெகன்மோகன் ஆட்சியில் லட்டு பிரசாதம் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்குகளின் கொழுப்பு கலந்த நெய் உபயோகிக்கப்பட்டுள்ளது. இது அபச்சாரம் அல்லவா? சுவாமியின் பணத்தை கொள்ளை அடித்தனர். சுவாமியின் பிரசாதத்திலும் கலப்படமா? பக்தர்கள் பல முறை இவர்களின் ஆட்சி காலத்தில் லட்டு பிரசாதத்தின் தரம்குறைந்து விட்டதாக புகார்கள் தெரிவித்தனர். ஆனால், அவற்றை இவர்கள் கண்டுக் கொள்ளவில்லை.





மேலும் அனைத்து பிரசாதத்திலும் கலப்படம் செய்தனர். தரம்குறைந்த பொருட்களையே உபயோகித்துள்ளனர். தற்போது தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நெய் கொள்முதல் மாற்றப்பட்டுள்ளது. இந்த தரம் மேலும் உயர்த்தப்படும். ஏழுமலையான் கோயில் நம்முடைய மாநிலத்தில் உள்ளது நம்முடைய அதிருஷ்டமாக பாவிக்கிறேன். அப்படி இருக்கையில், திருமலையின் புனிதத்தை நாம் தான் காப்பாற்றி கொள்ள வேண்டும். அது நமது கடமை. இவ்வாறு சந்திரபாபு நாயுடு பேசினார்.

முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் இந்த குற்றச் சாட்டை தொடர்ந்து, பல இந்து அமைப்புகள், ஏழுமலையான் பக்தர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், பாஜக, தெலுங்குதேசம், ஜனசேனா கட்சியினர் ஜெகனுக்கு எதிராகவும், அப்போதைய தேவஸ்தான நிர்வாகிகளுக்கு எதிராகவும் போர்க்கொடி தூக்கி உள்ளனர். இது குறித்து விசாரணை நடத்தி, தவறு இழைத்தவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர். எருமை, பன்றி கொழுப்பு: திருப்பதி லட்டு பிரசாதத்தின் தரம் குறைந்ததால் ஏதாவது கலப்படம் இருந்திருக்கலாமோ என எண்ணி, ஜெகன் ஆட்சியில் வாங்கப்பட்ட அனைத்து பொருட்களையும், கடந்த ஜீலை மாதம் 8-ம் தேதி என்.டி.டி.பி. சிஏஎல் எ.ஃப் லிமிடெட் எனும் டெல்லியில் உள்ள பரிசோதனை மையத்திற்கு திருப்பதி தேவஸ்தானம் அனுப்பி வைத்தது. அந்த நிறுவனம் இவற்றை பரிசோதித்து விட்டு, கடந்த ஜீலை மாதம் 17-ம் தேதி அறிக்கை அனுப்பி வைத்தது.

அதில் லட்டு தயாரிக்க பயன் படுத்தப்பட்ட பசு நெய்யில் சோயா பீன், சூரிய காந்தி எண்ணெய், ஆலிவ், கோதுமை பீன், சோளம், பருத்தி கொட்டையுடன், மீன் எண்ணெய், பாமாயில், பன்றி கொழுப்பு மற்றும் எருமை கொழுப்பு ஆகியவை கலந்துள்ளதாக அறிக்கை வந்துள்ளது. இந்த ஆதாரத்தை வைத்து தான் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஜெகன் ஆட்சியில் நடந்த இந்த அநீதி குறித்து அம்பல மாக்கி உள்ளார்.

# 5000 கி.மீற்றர் தொலைவில் இருந்து மருத்துவர் நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை மூலம் நுரையீரல் கட்டியை அகற்றி சாதனை


சீனாவில் 5000 கி.மீக்கு தொலைவில் இருந்த மருத்துவர் நோயாளிக்கு அறுவை சிகிச்சை மூலம் நுரையீரலில் இருந்த கட்டியை அகற்றி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

உணவு, உடை, இருப்பிடம் இவற்றுடன் தொழில்நுட்பமும் தற்போது அனைவரின் அடிப்படை தேவையாகி விட்டது. பிறப்பில் இருந்து இறப்பு வரை அறிவியலும், தொழில்நுட்பமும் நம் நிழல் போல கூடவே வருகிறது. தொழில்நுட்பம் பன்மடங்கு வேகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சி பல சாதகங்களையும், பாதகங்களையும் கொண்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பங்கள் பல ஆச்சரியமூட்டும் வேலைகளும் செய்து வருகிறது.

சீனாவின் மேற்கு பகுதியில் ஒரு நபர் நுரையீரல் சிகிச்சைக்காக சின்ஜியாங் பகுதியின் கஷ்கரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் லுவோ கிங்குவான், ஷாங்காயில் உள்ள மருத்துவமனையில் இருந்தார். அந்த நோயாளி இருக்குமிடத்திலிருந்து சுமார் 5,000 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மருத்துவமனையில் இருந்தார். ஷாங்காயில் இருந்த அந்த மருத்துவர், 5G தொழில்நுட்பம் உள்ள அறுவை சிகிச்சை செய்யும் ரோபோ மூலம் அந்த நோயாளியின் நுரையீரல் கட்டியை அகற்றியுள்ளார்.


இந்த அறுவை சிகிச்சை செய்யும் ரோபோ இந்தியாவிலும் தயாரிக்கப்பட்டு, கடந்த மார்ச் மாதம் ஒரு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. ஆனால் இந்தியாவில் குர்கானில் இருந்த மருத்துவர், டெல்லியில் இருந்த நோயாளிக்கு, சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து அறுவை சிகிச்சை மேற்கொண்டார். இந்தியாவில் அறுவை சிகிச்சை செய்த ரோபோ, சுமார் 5 கைகளை கொண்டிருக்கும். இந்த ரோபோ மூலம் இதய அறுவை சிகிச்சை கூட செய்யலாம் என கூறப்படுகிறது. (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். மனதில் இருந்த வீண்கவலை கள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவை யான நிதி உதவியும் கிடைக்கும். உத்தி யோகஸ்தர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு. கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறலாம்.





ரிஷபராசி அன்பர்களே! எதிர் பார்த்த நல்ல செயல்கள் நடக் கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்பு கள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். எதிர் பார்த்த பணவரத்து இருந்தாலும் வியா பாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.





மிதுனராசி அன்பர்களே! சாமர் த்தியமாக பேசி காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர் கள். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். பூர்வீக சொத்து க்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக் கும். பார்ட்னர்கள் ஒத்துழைப்புடன் வியா பாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும்.




கடகராசி அன்பர்களே! சுபகாரிய ங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். தேவையற்ற கவலைகள் நீங்கும். உங்களை பற்றி விமர்சனம் செய்து வந்தவர்கள் அதனை விட்டு விடுவர். தொழில் வியா பாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.





சிம்மராசி அன்பர்களே! துணிச் சலாக எதையும் செய்து முடிப் பீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படை யும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். உத்தி யோகத்தில் பணிக் கஷ்டங்கள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! நினை த்த காரியம் நிறைவேறும். எதையும் மனோ தைரியத்து டன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக் கும். நெருக்கடியான நேரத்தில் எதிர் பார் த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியா பாரத்தில் லாபம் உண்டாகும். எதிர் பார் த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோக ஸ்தர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப் பர்.குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ் நிலை மாறி மகிழ்ச்சியான நிலை வரும்.





துலாம் ராசி அன்பர்களே! எதி லும் அவசரப்படாமல் நிதான மாக முடிவு எடுப்பது நன்மை தரும். மனதில் இருந்த கவலை கள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செல வும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறு வதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தயக் கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ் நிலை நிலவும்.





விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்று வதில் கடும் முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாக னம் போன்றவற்றை புதுப்பீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபார த்தில் இருந்த மந்தநிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வும் கிடைக்கும். குடு ம்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனை விக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும்.








தனுசராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக நட க்கும். வீண்கவலை நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிக ரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர் கள். தொழில் வியாபாரம் விருத்தி யடையும். ஏற்கனவே வரவேண்டி இரு ந்து வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம் மதி உண்டாகும். வர வேண் டிய பணம் வந்து சேரும். சாம ர்த்தியமான பேச்சினால் காரிய ங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அடிக்கடி கனவுகள் வரக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதக மான பலன் தரும். உத்யோகத்தில் இருப் பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடி த்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும்.




கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடி யும். நோய் நீங்கி உடல் ஆரோக் கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதக மான நிலை காணப்படும் குடும்பத்தில் பிரச்சனை தலைதூக்கி பின்னர் சரியாகும்.




மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடை பெறும். உடல் ஆரோக்கியத்தை தரும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவ காரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களில் இருந்த தடைகள் விலகும். போட்டி கள் குறையும். குடும்பத்தில் இருப்பவர் களுடன் இணக்கமான போக்கு காணப் படும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## சஜித் பிரேமதாசாவின் தோல்விக்கு என்ன காரணம்?

(17ம் பக்கத் தொடர்ச்சி) திருத்தத்தை முழுமையாகச் செயல்படுத்துவதையே முன்வைக்கிறார் சஜித்.

கடந்த ஜீலை மாதம் யாழ்ப்பாணத்தில் தமிழ் தலைவர்களைச் சந்தித்த பிறகு பேசிய அவர், தான் ஜனாதிபதியானால் 13வது சட்டத் திருத்தத்தை முழுமை யாகச் செயல்படுத்தப் போவதாகத் தெரி வித்தார். 'சர்வதேச சமூகத்தின் ஆதரவு டன் புலிகளை விட சக்தி வாய்ந்த பயங்கரவாத அமைப்பை உருவாக் கவே இது உதவும்' என பிவிதுரு ஹெல உருமய போன்ற அமைப்புகள் குற்றம் சாட்டிய போதும் அவர் அதி லிருந்து பின்வாங்கவில்லை

இதனால் இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரி ப்பதாக அறிவித்தது. வடக்கிலும் கிழக் கிலும் மேலும் பல கட்சிகள் இவருக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தன. தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போதும், முதல் விருப்ப வாக்குகளில் இந்தப் பகுதிகளில் சஜித்திற்கு கூடுதலான ஆதரவு இருப்பது தெளிவாகவே தெரிந்தது.

இந்தியாவை பொறுத்தவரை, எப் போதும் இந்தியாவை சந்தேகத்துடன் பார்க்கும் ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸாநாய க்கவை விட, ஆரம்பத்திலிருந்தே சீனாவை விட இந்தியாவை நெரு க்கமாகக் கருதும் சஜித்தை கூடுத லாக விரும்பக்கூடும். இந்த நிலையில், தோல்வி அடைந்திருந்தாலும், சஜித் திற்கு இதுவொரு முக்கியமான தேர்தல்.

## சிங்கள டயஸ்போரா VS தமிழ் டயஸ்போரா

(3ம் பக்கத் தொடர்ச்சி) அமைப்பு க்கள் திரைமறைவில் சிங்கள புலனாய் வாளர்களோடு இயங்கி கொண்டு பேருக்கு தமிழ் டயஸ்போரா என இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். போராட்டம் நிறைவடைந்து ஒன் றரை தசாப்தங்களை எட்டியுள்ள நிலையில் ஒரு இனத்துக்கான நீடி த்த நிலைத்த அரசியலை கட்டமை க்க இயலவில்லை! ஒரு தலைவனை இனம் காண முடியவில்லை! இவர் களால் இதுவரை சாதித்தவை ஒன் றுமே இல்லை! ஈழ போராட்டத்தின் அவலங்களுக்கு மேல் நின்று காசு பறித்ததை தவிர... ஆனால் சிங்கள டயஸ்போராக்கள் சொற்ப காலத்தில் சிறு விதையாய் இருந்த ஒரு கட்சியை ஆலமரமாக்கியிருக்கிறார் கள்!

JVP கூட்டத்தின் பேச்சை கேட்க வேண்டுமென்றால் கூட்டம் திரளும் ஆனால் வாக்கு திரளாது என்ற கருத் தியலை இரு வருடங்களுக்குள் ஒழி த்து கட்டி 3வீத வாக்கு வங்கியை 60வீதமாக்கி அபரிவித அதிசயத்தை நிகழ்த்தி காட்டியிருக்கிறார்கள்.

தன் தேசத்துக்காக தன் இன மக்க ளின் விடிவுக்காக, தன் இனத்துக் கான தூய அரசியலுக்காக அனை த்து சிங்கள டயஸ்போராக்களும் ஒரு நேர் கோட்டில் நின்று அத்தனை வல்லாதிக்க சக்திகளின் இராஜதந்திர நகர்வுகளையும் முறியடித்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.

ஆனால் பல தசாப்தங்களாக சிங்கள மக்களை விட அதிக சனத்தொகை யினை புலம்பெயர் நாடுகளில் கொண்ட எம் தமிழ் டயஸ்போராக் கள் எம் இனத்துக்கான தலைவனை அல்லது சரியான தூய அரசியல் பொருளாதார கொள்கைகளை இது வரை கட்டியமைக்காமை தமிழினத் துக்கான சாபக்கேடு!

ஈழ நிலத்திலும் சரி புலத்திலும் சரி தமிழன் தன் நிலைப்பாடுகளில் ஒரு சேர மாற்றம் உண்டாகாத வரை உணர்ச்சி வசப்பட்ட உப்பு சப்பில் லாத எதற்குமே உதவாத எதிர்கால சந்ததிக்கு உகந்தல்லாத இந்த வீணாய் போண இழி நிலை அரசியல் தான் தொடர்சியாக மிஞ்சும்! அவர் கள் இனத்துக்கான அரசியலை முன் னெடுக்கிறார்கள் ஆனால் நாங்கள் தனி மனித அரசியலை முன்னெடுக் கின்றோம். நாம் சிங்கள மக்களிடம் படிக்க நிறையவே உண்டு!

## ஆரோடு நோவேன்? ஆர்க்கெடுத்துரைப்பேன்?

(20ம் பக்கத் தொடர்ச்சி) இன்னும் உண்டு. ஒரு திருமணம் ஏற்பாடாகி வந்தி ருக்கிறது. ஆனால், அந்த மணவாளன் தன்னைப் பற்றிய விவரங்களை முழு தாகவே மறைத்து அவளைத் திருமணம் செய்ய முற்பட்டிருக்கிறான். இறுதியில் தான் தெரிந்தது அவனுக்கு ஏற்கனவே மூன்று பிள்ளைகளும் மனைவியும் ஏற்கனவே உண்டென்று. அரும் பொட் டில் தப்பினேன் என்று சொன்னாள். இனி திருமணத்தைப் பற்றிய பேச்சே வேண்டாம் என்கிறாள்.

செந்நிலா.- ஒரு கண்ணும் ஒரு கையும் இல்லை. ஆனாலும் 'நம்பிக்கை' என் றொரு சிறிய அமைப்பை உருவாக்கி அதை நிர்வகித்துக் கொண்டிருக்கிறாள்.

முதலாவதாக இவர்கள் எதிர்த் தரப்பினால் தோற்கடிக்கப்பட்டார்கள். யுத்தத்த தின் மூலம். அதைத் தொடர்ந்து சிறையிலடைக்கப்பட்டனர். மீள வேண்டியிரு ந்தது. இரண்டு, மூன்று ஆண்டுகள் சிறையிருந்தே மீள வேண்டியிருந்தது.

மீண்ட பெண்களைத் தமிழ்ச் சமூகம் தோற்கடிக்கிறது. அது நோக்கும் நிலை குறித்து, நடத்தும் விதம் குறித்து இங்கே நாம் எழுதித் தீரா

இவர்களுக்குரிய வாழ்க்கையை அளிப்பதற்கு, இவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு, இவர்களும் மகிழ்ந்திருப்பதற்கு, மிஞ்சிய காலத்தை இவர்கள் இயல்பாக மற்றவர்களோடு கலந்து கொண்டாடுவதற்கு நம்மிடத்திலே ஏதாவது வழி உண்டா?

சிந்தியுங்கள் உறவுகளே! சமூக அமைப்புகளே! இன்னும் காலம் தாழ்ந்து போகவில்லை! வாருங்கள் வாழ வைப்போம்!

## 5000 கி.மீற்றர் தொலைவில் இருந்து மருத்துவர்

(21ம் பக்கத் தொடர்ச்சி) அந்த ரோபோ மூலம் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் முன்னால் ஒரு 3D தொழில்நுட்பம் கொண்ட 32 இன்ச் ஸ்கீரின் இருக்கும். ஒரு கேமராவோடு இருக்கும் அந்த கருவி, மருத்துவர் வேறு எங்கும் பார்த்தால் நோயாளிக்கு சிகிச்சையளிப்பதை நிறுத்திவிடும். மறுபக்கம் நோயாளியுடன் இருக்கும் ரோபோ 5 கைகளுடன் 8 மில்லி மீட்டர் கருவியுடன் சிகிச்சை அளிக்கும் என கூறப்படுகிறது.

மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாக வெளியாகும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
11 ஒக்டோபர் 2024 வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
வாரம் தோறும் eelanadu.ca என்ற மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டியில் சிக்கிக் கொள்ள இலங்கை விரும்பவில்லை - ஜனாதிபதி அநுர தெரிவிப்பு!

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான புவிசார் அரசியல் மோதலில் சிக்குப்படுவதற்கு இலங்கை விரும்பவில்லை என புதிய ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க தெரிவித்துள்ளார். இதன் மூலம் வலுவான சுயாதீன வெளிவிவகார கொள்கை என்ற அணுகுமுறைக்கான விருப்பத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச சஞ்சிகையொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் புவிசார் அரசியல் மோதல்களில் இருந்து விலகியிருப்பதற்கான தனது அரசாங்கத்தின் விருப்பத்தினை அனுர குமார திசநாயக்க வெளியிட்டுள்ளார்.

அவரது தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையின் இரண்டு நெருங்கிய அயல்நாடுகளான சீனா இந்தியாவுடன் சமநிலையான உறவுகளை பேண முயலும் என குறிப்பிட்டுள்ள அவர் குறிப்பிட்ட ஒரு நாட்டுடன் தன்னை இணைத்துக்கொள்ள முயலாது என தெரிவித்துள்ளார்.

புவிசார் அரசியல் மோதலில் நாங்கள் ஒரு பகுதியாக மாறமாட்டோம்,எந்த



தரப்புடனும் இணைந்து கொள்ள மாட்டோம் என தெரிவித்துள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் துண்டாடப்படுவதற்கு நாங்கள் விரும்பவில்லைஎன குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளும் பெறுமதி மிக்க நணபர்கள்,எங்கள் அரசாங்கத்தின் கீழ் நாங்கள் அவர்கள் நெருங்கிய சகாக்களாக மாறுவதை விரும்புகின்றோம் என அனுரகுமாரதிசநாயக்க தெரிவித்துள்ளார். ஐரோப்பிய மத்திய கிழக்கு ஆபிரிக்காவுடனும் சிறந்த உறவை பேண விரும்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கும் பிராந்திய பதற்றங்களிற்கு இடையில் இலங்கையின் இறைமையை பாதுகாப்பதற்கு இந்த நடுநிலை வெளிவிவகார கொள்கை அவசியம் என தெரிவிதத்துள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி பரஸ்பரம் சாதகமான இராஜதந்திர உறவுகளை பேணுவதற்கு முயற்சி செய்வார் என குறிப்பிட்டுள்ளார்.




## ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற சர்வதேச நாணய நிதியம் தயார்

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ள சர்வதேச நாணயநிதியம் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டம் குறித்த மறு ஆய்விற்கான திகதி குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளது.

2022 இல் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட பின்னர் இலங்கையை மீட்சி பாதையை நோக்கி கொண்டு செல்வதில் மிகவும் கடுமையான போராட்டத்தின் மூலம் கிடைத்த பலாபலன்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக இலங்கை ஜனாதிபதியுடனும் அவரது குழுவினரும் இணைந்து பணியாற்றுவதற்கு ஆர்வமாக உள்ளோம் என சர்வதேச நாணயநிதியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய நிர்வாகத்துடன் கூடிய விரைவில் எங்கள் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் மூன்றாவது ஆய்வினை முன்னெடுப்பதற்கான திகதி குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

